செந்தமிழ்

தொகுதி 81 - டிசம்பர் - 87 பகுதி-4

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

—உள்ளே—

ஆறாம் உலகத்தமிழ் மாநாடு
—பயணக் குறிப்புகள்

சிலம்பு — ஓர் ஒப்புவமை

மில்டனின் கடவுட் பற்று

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

ஆசிரியர் : முத்துமலைச்சாமி பி. ஏ., பி. எல்.,

செந்தமிழ்

தொகுதி - 81 டிசம்பர். 87 பகுதி 4

மதுரைத் தமிழ்ச் சங்கம்

பொருளடக்கம் பக்கம்

முன்னுரை

1. ஆறாவது உலகத் தமிழ்மாநாடு பயணக்குறிப்பு
—டாக்டர். பழனி அரங்கசாமி 1

2. அழகுநடை — ப முத்துச்சாமி, எம். ஏ., எம். எட்., 17

3. தமிழ் இலக்கியம் காட்டும் பெண்களின் சமுதாயத் தாழ்நிலை
—டாக்டர் தா. ஈசுவர பிள்ளை 18

4. சிலப்பதிகாரம், பெரிய எழுத்து கோவலன் கதை, கோவலன் திருப்புகழ் காவடிச்சிந்து ஓர் ஒப்பாய்வு
—டாக்டர் மு. மாணிக்கம் 30

5. மில்டனிடம் காணப்படும் கடவுட்பற்று
—திரையன் 39

6. பிறழ உணரப்பட்ட சங்கச்சொல் - கல்லா
- எஸ். சௌந்தரபாண்டியன் 46

7. மதுரைத் தமிழ்ச் சங்கச் செய்திகள் 49

பெறுப்பாசிரியர் — டாக்டர் பழனி. அரங்கசாமி

29-12-87ம் நாள் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட

இரங்கல் தீர்மானம்.

மாண்பு மிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி இரமச்சந்திரன் அவர்கள் 24-12-87 ஆம் நாள் திடீர் மரணமடைந்த செய்தியை அறிந்து மதுரைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவினராகிய நாங்கள் பெரும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தோம். புரட்சித்தலைவரவர்களின் திடீர் மறைவால் சொல்லொண்ணாத் துயரத்திலாழ்ந்துள்ள அன்னாரின் துணைவியார் திருமதி வி.என் ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்கும் தமிழக அரசிற்கும் எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொன்மனச் செம்மல் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இருந்து பெருமைப் படுத்தியதையும், தமிழ்ச் சங்கத்திற்கு 11 சவரன்கள் அன்பளிப்பாக அளித்ததையும், ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்றபோது, நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு மதுரையின் பையப் பகுதியில் சிலை நிறுவி சிறப்புச் செய்ததையும் நினைவு கூர்ந்து அன்னாரின் மறைவு மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குப் பேரிழப்பாகும் என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்

மதுரை தமிழ்ச் சங்க
ஆட்சிக் குழுவினர்

ஆசிரியர் பக்கம்

செந்தமிழ் டிசம்பர் இதழ் சற்று காலதாமதமாக வருவதனைப் பொறுத்தருள வேண்டுகிறோம் அச்சக மாற்றமும், புதிய எழுத்துகளைக் கொண்ட கட்டுரைகள் வெளியாவதுமே தாமதத்திற்குரிய காரணங்களாகும். ஆறாம் உலகத்தமிழ் மாநாடு பற்றிய ஒரு கட்டுரையில் நேர்முக வருணனையாகவே செய்திகள் சொல்லப் பட்டுள்ளன மொழிபெயர் தேயத்தில் நிகழ்ந்த அம்மாநாட்டுக்குச் செல்ல இயலாதோரும், ஏனைத்தமிழன்பர்களும் அதனைப்படிக்கலாம் சிலப்பதிகாரத்தை ஒரு புதிய ஒப்பீட்டு முறையில் காணுவதே பிறி. தோர் கட்டுரை. அந்தக்காப்பியத்தின் வேடிக்கையான திரிபுகளும் மாற்றங்களும் கிராமீய முறையில் நாட்டு வழக்கத்தையும், தெருக் கூத்தினையும் ஒட்டி அமைந்திருந்தாலும், அவற்றையும் நாம் தெரிந்து கொள்வதில் தவறில்லை இறைமைக் கொள்கை என்பதும் இறைவழிபாடும் உலகளாவிய செயல்கள் தானே! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது திருமூலரின் தவமொழி அல்லவா! பதி-னேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக்கவிஞன் மில்டனின் கட-வுட்பற்று குறித்து வெளியாகும் கட்டுரை அனைவரும் படிக்கத்தகுவதாகும். கிருஷ்ணாய இயக்கம் நிறுவிய பிரபுபாதரின் வரலாற்றுத் தொடர் கட்டுரையும், நூல் மதிப்புரையும் பிறவும் அடுத்த இதழில் வெளியாகும். உங்கள் வாழ்த்தும் நல்லாதரவுமே யாம் வேண்டுவன.

ஆசிரியர்

ஆறுவது உலகத் தமிழ் மாநாடு — பயணக் குறிப்பு

டாக்டர். பழனி. அரங்கசாமி

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே பேசப் பெற்று வந்த ஆறாவது உலகத் தமிழ் மாநாடு 1987 - நவம்பர் 15 முதல் 19 வரை உறுதியாக நடைபெறும் என்று மலேசியாவிலிருந்து அறிவிப்பு வந்தது மாநாட்டைத் தானே முன்னின்று நடத்திக் காட்டிய செயல் வீரரும், மலேசிய பொதுப்பணி அமைச்சரும் ஆகிய டத்தோ சாமிவேலு அவர்கள் ஓரிரு திங்கள் மூன்னதாகவே சென்னைக்கு வந்து தாய்த் தமிழகத்துப் பெருமக்களையும், அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும் விழாவில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். கட்சி சார்பற்ற விழா என்பதனாலே அனைத்துக் கட்சியினரையும் சந்தித்து விட்டுச் சென்றார். இருப்பினும் தமிழக முதலமைச்சருக்கு ஏதோ ஒரு மனத்தாங்கல் இருந்ததும், அதனால் அரசுச் சார்பில் யாரையும் மாநாட்டுக்கு அனுப்பவில்லை என்பதும் நமக்கு நேரடித் தொடர்பில்லாத நிகழ்ச்சிகள்.

ஒன்றரை ஆண்டுக்கு முன்னதாக மாநாட்டு மலர்க் குழுவினருக்கு ஒரு ஆங்கிலக் கட்டுரை ஒன்றை நான் அனுப்பி இருந்தேன். மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப் படுகின்ற நிலையில், கட்டுரையின் கதி என்னவாயிற்றோ என்று தெரியவில்லை இருப்பினும் எதிர்பாராவிதமாக, அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் மலேசியப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது சுவாமி விபுலாநந்தரின் மதங்க சூளாமணி என்னும் அக்கட்டுரையினைப் பற்றிய ஆய்வில் கலந்து கொள்ளலாம் என்பதே அதில் கண்ட செய்தி.

மாநாட்டில் கலந்து கொள்வதோடு மலேசிய, சிங்கப்பூர் நாடுகளைக் கண்டு திரும்பலாமே என்றும் எண்ணினேன். கருத்தரங்கு மாநாடு போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பயணச் செலவுகளை பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ளும் மரபினை ஒட்டி நானும் அதற்கு விண்ணப்பித்தேன். செல்வாக்கு உடையவர்களுக்கே அது கிடைத்துக் கொண்டிருந்த நிலையில், அதனைப்பற்றிக் கவலைப்படாது சொந்தச்

செலவில் பயண ஏற்பாடுகளை மேற்கொண்டேன். விசா, வெளி நாட்டுச் செலாவணி ஆகியவற்றைப் பெறுதற்கு சென்னைக்கு நவம்பர் பத்தாம் நாளே சென்று 13 ஆம் தேதி இரவு 11.40 மணிக்கு சிங்கபூர் ஏர்லைன்ஸ் விமானத்தில் புறப்பட ஏற்பாடாயிற்று.

வெள்ளை வெளேர் என்று வண்ணம் பூசப்பட்ட மிக நீண்ட இறக்கைகள். மூக்குச் சற்று வளைந்து, எந்த நேரத்திலும் பறந்து விடுமோ என்று எண்ணத்தகும் பிரம்மாண்டமான ஒரு இராட்சதப் பறவை போன்ற அமைப்பு. சிங்கப்பூர் அரசினரால் நடத்தப் பெறும் இந்தப் பயணிகள் விமானம் முந்நூற்றுக்கு மேற்பட்டோரைச் சுமந்து செல்ல ஆயத்தமாக நின்றிருந்தது. விமான நிலையப் பரிசோதனைகள் முடிந்து பயணிகள் அமரவே ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகியது. விமானம் லேசாக நகரத் தொடங்கி லாவகமாக வளைந்து திரும்பி, மைல் கணக்காக நீண்டிருநத நேர் பாதையின் ஒரு முனைக்கு வந்தது. ஒரு கணம் நின்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் அசுரவேகத்தில் ஓடத் தொடங்கியது. சொகுசான இருக்கைகளில் அமர்ந்து, வார்ப்பட்டைகளினால் அந்த இருக்கைகளோடு நம்மை பிணித்துக் கட்டிக் கொண்டாலும், விமானம் ஓடுகின்றவேகத்தையும், தரையினை விட்டு மேலேறி ஆகாயத்தில் கிளம்புவதனையும் நன்றாக உணரமுடிகிறது.

முற்றும் மூடப்பட்டிருக்கும் கண்ணாடிச் சாளரத்தின் வழியாகப் பார்த்தால், சென்னை நகரம் கீழே கிடந்தது நீலமும், லேசான மஞ்சளும் ஆன இரத்தினக் கற்களை யாரோ இறைத்து விட்டாற் போன்ற அழகான தோற்றம். மிக நீண்ட ஒளிச்சாரமாக பட்டைக் கோடு போல் தெரிந்தது அண்ணாசாலை தான் ஒரு சில மணித் துளிகளுக்குள் வெளியில் ஒன்றுமே தெரியவில்லை. புகை மண்டலம் போல் வெள்ளையான மேகங்கள். இடையிடையே நீல வான். விமானம் இருபது ஆயிரம் அடிகளுக்கு மேல் பறக்கிறது என்று அறிவித்தார்கள்.

தூய்மையும், மெல்லிய நறுமணமும் கமழ்ந்த அந்த விமானத்தில் பட்டாம்பூச்சி போல் வளைந்தும் நெளிந்தும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த பணிப் பெண்கள் அனைவரும் ஆங்கிலம் அறிந்தவர்; சீன மொழி பேசும் சித்திரப் பாவையர்; ஓவியமே உருக்கொண்ட அழகியர். முகத்தையும் கைகளையும் துடைத்துக் கொள்ள சற்றே ஈரமானதும் வெதுவெதுப்பானதுமான ஒரு சிறிய டவலை

அழகுபடச் சுருட்டி ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தார்கள். பளிங்கு போன்ற கண்ணடி டம்ளர்களில பழரசம், ஒயின், விஸ்கி போன்ற பானங்கள் வழங்கப்பட்டன—அளவோடு தான். விரும்பிக்கேட்டோரின் ஆசையும் வீண்போகவில்லை. ரொட்டி, வெண்ணை, வறுத்த இறைச்சி, முட்டை, காய்கறி. நெய்ச் சோறும் தொடர்ந்தன. உணவு முடிந்ததும் தத்தம் இருக்கைகளில் பொருத்தப்பட்டிருந்த காதுக் கருவி களை மாட்டிக் கொண்டால். மெல்லிய இசை. எங்கோ ஆகாயத்தில் அந்தரத்தில் பறந்து கொண்டிருக்கிறோம் என்கிற நினைப்பை விட்டு விட்டால் சொகுசான பயணம். இலேசான மயக்கத்தில் ஓரிரு மணிகள் கண்ணயர்வு, அவ்வளவு தான். சிங்கப்பூரை நெருங்கு-கிறோம் என்கிற அறிவிப்பு. ஒரு மணி நேரத்தில் பிறிதோர் விமானத்-தில் கோலாலம்பூர் அடைகிறோம்.

மலாயாப் பல்கலைக் கழகப் பேருந்து மாநாட்டுக்கு வந்தோரை அழைத்துச் சென்றது. விமான நிலையத்திலிருந்து கோலாலம்பூர் நகரம் ஏறத்தாழ இருபது மைல்கள். பல்கலைக் கழகம் ஆயிரக்-கணக்கான ஏக்கரில் அங்குப் இங்குமாகப் பரந்து கிடக்கிறது. அவற்றுள் மூன்று மாணவர் விடுதிகளின் அறைகளில் தங்குவதற்கும் உணவுக்கும் வசதி செய்திருந்தனர். மாணவர்க்கு விடுமுறையாக இருந்தமையான். இவ்வசதி கிட்டியது.

ஒவ்வொரு விடுதியிலும் உணவுப் பகுதி இருந்தது. விவரம் அறியாமல் முதல் விடுதியின உணவுக்கே முதல் நாள் ஏறத்தாழ அனைவரும் போட்டி போட்ட போது சற்று குழப்பம். முறையான அறிவிப்புக்குப் பின், உணவு ஒரு பிரச்சனையாக இல்லை. தங்கும் விடுதியிலும், ஆய்வரங்கத்திலும், சொற்பொழிவு மேடைகளிலும், கொஞ்சமும் அயராது, முகம் சுளிக்காது, அமைதியாகக் கேட்டு ஆவன செய்த பெண் தொண்டர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாநாட்டின் வெற்றிக்கு இந்தத் தொண்டர்களின் பணி மகத்தானதாகும். ஒவ்வொரு அறையிலும் இருவர். எனது அறை நண்பர் டி. எஸ். சாமி ஒரு மலேசியத் தமிழர். சிவகங்கைக்கு அருகில் பனங்குடியைச் சார்ந்தவர். லண்டனில் விஞ்ஞானக் கல்வி பயின்ற அவரது மகள் கோலாலம்பூருக்கு அருகில் உயர்பள்ளி ஆசிரியை மருமகன் ஒரு கம்ப்யூட்டர் என்சினீயர். மலேசிய சிங்கப் தமிழர்கள் பொதுவாக செல்வ வளம் மிகுந்தவர்களாகக் காணப்-படுகின்றனர். இது முற்றும் உண்மை அல்ல. பால்மரக்காடுகளிலும்,

உட்பகுதிகளிலும் ஏழ்மை இருக்கத்தான் செய்கிறது என்று ஈப்போ, மலாக்கா பகுதிகளிலிருந்து வந்தோர் கூறுகின்றனர் ஆயினும் எந்த மலேசியத் தமிழனும் உணவு உடைப் பஞ்சத்துக்கு ஆட்படவில்லை. நலமுறவே வாழ்கின்றனர். மலேசியச் சமூகம் பற்றிய கருத்துக்களைக் கட்டுரையின் பின்னல் காண்போம் இப்போது மாநாட்டு நிகழ்ச்சிகள் அன்றாடம் கண்டவாறு கீழே குறிக்கப் பெற்றுள்ளன.

நவம்பர் 16

காலை உணவு முடிந்ததும் பேருந்துகள் வந்து மாநாட்டுப் பேராளர்களையும் விருந்தினர்களையும் கோலாலம்பூரில் அந்த நகரத்-துக்கே அணி செய்யும் உலக வாணிப மையக் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றன. குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பிரும்மாண்ட-மான அந்த அரங்கத்தினுள்ளே பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் அமரலாம். ஹால் நிரம்பி வழிந்தது.

மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து கணீரென்ற குரலில் அறிவிப்புகள் வந்து கொண்டிருந்தன. காலை 9-மணி அளவில் மலேசியப் பிரதமர் டாக்டர் மாதிர் மூகமது வந்தபோது அவரை வரவேற்று அழைத்து வந்தார் டத்தோ சாமிவேலு அவர்கள். பிற அமைச்சர்கள். வெளிநாட்டுத் தூதுவர் ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர். கலைஞர் கருணாநிதி மலேசியப் பிரதமருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். சற்று நேரத்திற்குப் பின் மேடையில் இசை நிகழ்ச்சி. அதை தொடர்ந்து ஷோபா எனும் நங்கை 'யாமறிந்த மொழிகளிலே' என்னும் பாரதியின் பாட்டுக்கு அபிநயம் பிடித்தார் மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் மேடை-யேறி மலாய் மொழிப் பாடல் ஒன்றனுக்கு ஏற்ப வளைந்தும் நெளிந்தும் நடனம் ஆடினர். புன்னகை பூத்த முகத்தோடு அவர்கள் ஆடிய நடனம் இன்றும் என் நெஞ்சில் நிழலாடுகிறது. பெண்கள் நீல வண்ணத்தில் சாராங்கு எனும் மேலுடையும், வெளிர்ச் சிகப்பில் வேட்டி போன்ற காபாய் உடையும் அணிந்திருந்தனர். இந்த மலாய் நட-னம் முடிந்ததும், சீனப் பண்பாட்டுக் கலைநிகழ்ச்சி ஒன்றில் முழ நீளப்-பச்சை அங்கி அணிந்த ஆடவர் இருவர் கறுப்பும் மஞ்சளும் கலந்த பட்டுடை அணிந்த சீனப்பெண்கள் இருவர் ஆகிய நால்வரும் மெல்லிய இசைக்கேற்ப தாளம் போட்டு ஆடிக் காட்டினர் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மண்டபத்தின் உள்ளே அமர்ந்திருக்கும் அனைவரும்

காணக்கூடியவாறு மேடையில் அமைக்கப்பட்டிருந்தாலும், இன்னொரு ஏற்பாடும் செய்திருந்தார்கள். அந்த நடன அரங்கத்தில் தொங்க விடப்பட்டிருந்த ஒரு வெள்ளித் திரையில் அங்கு நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் பெரிய அளவில் சினிமாவைப் போன்று தெரிந்து கொண்டேயிருந்தன. சுருங்கச் சொன்னால், கட்டுக் கடங்காத மக்கட் கூட்டத்தைச் சுமந்து நின்ற அந்த மாபெரும் அரங்கத்தில் ஒலி ஒளிப் பிரச்னை என்பது இல்லவே இல்லை.

சிற்பியின் கனவு எனும் புதுமையான நாட்டிய நாடகம் ஒன்று மலேசியக் கலைஞர் **கோபால் ஷெட்டியால்** அரங்கேற்றப்பட்டது. இவருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும் இருப்பினும் நடனம் ஆடுதற்கேற்ற உடலமைப்பையும், சுறு சுறுப்பும், நளினமும் இன்றும் குறையவில்லை. இந்நிகழ்ச்சி முடிந்ததும், வரவேற்புக் குழுவினைச் சார்ந்த பெண்கள் வரிசையாக வந்தனர். அனைவரும் காஞ்சீபுரம் பட்டுச்சேலையினை ஒரே நீலவண்ணத்தில் உடுத்தியிருந்தனர். பட்டுச் சீருடையணிந்த அப்பாவையர் அனைவரும் முன் வரிசையில் அமர்ந்திருந்த அத்துணைத் தலைமை விருந்தினர் ஒவ்வொருவரையும் தனித் தனியே முன்னின்று அழைத்துச் சென்று மேடையில் அமர்த்தியது புதுமையாகவும் அழகுறவும் அமைந்திருந்தது மலேசியப் பிரதமர், அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர், மொரிசியஸ் நாட்டுத் திருமலை செட்டி, ஈழத்து அமைச்சர்கள் தொண்டைமான், ராஜதுரை தமிழகத்திலிருந்து கலைஞர், கி.ஆ.பெ விசுவநாதன், மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்தோருள் குறிப்பிடத் தகுந்தோர்

நிகழ்ச்சிக்கென்றே எழுதிய இறைவணக்கப் பாடலை கணீரென்ற குரலில் ஒருவர் பாடினார். கடல் கடந்து வந்த தமிழர் நாங்கள்—இன்னலடைந்து ஏற்றம் பெற்றுள்ளோம் என்ற பொருள் படும் வரிகள் வந்தபோது 'அலை கடந்து மலை கடந்த தமிழினம்' என்று வரியினை மட்டும் ஓங்கிய குரலில் பாடியது உருக்கமாக இருந்தது வரவேற்புரையினை பேராசிரியர் மாரிமுத்து நிகழ்த்துவார் என்று அறிவித்தனர் எதிர்பாரா முறையில் அவர் மலாய் மொழியில் வரவேற்றமை சற்று அதிர்ச்சியாக இருந்தது சிறிது நேரம் ஆங்கிலத்திலும் பின் சில மணித்துளிகள் தமிழிலும் பேசினார்.

மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய ஒரு இன்றியமையாத செய்தி ஒன்றனை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. நமது

நாட்டுக்கும், மக்களுக்கும் தலைவர்களுக்கும் தெரிய வேண்டிய செய்தி அது. மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் முதலில் மலாய் மொழியிலும், பின் ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிவிக்கப்பட்டன. நிகழ்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இதே நிலைதான். முன்னுரை வரவேற்புரை, ஆகிய அனைத்தும் மலாய் மொழியிலே தொடங்கிப் பேசினார்கள். உலகத்தமிழ் மாநாடு என்று கூறி மலாய் மொழியில் இப்படிச் சரமாரியாகப் பேசுகிறார்களே என்று குழப்பமும் கலவரமும் அடைந்தேன். 'உடல் தமிழுக்கு உயிர் மண்ணுக்கு' என்று தமிழகத்து மேடைகளில் முழக்கம் இடுகின்ற இலக்கிய மேதைகளும் அரசியல் தலைவர்களும் சலனம் இன்றி அமர்ந்திருந்தார்கள். மலாசியத் தலைவர்களிடையும், மக்களிடத்தும் உள்ள மொழி பற்றிய பரந்த மன உணர்வினை இவர்களும் கற்றுக் கொண்டு சென்றால் நன்றாக இருக்குமே என்று எண்ணினேன். தங்களது அரசியல் சட்டத்துக்கு ஏற்ப மொழிவேறுபாடின்றி மலேசிய மக்கள் அனைவரும் அதனைப் போற்றிச் செயல்படுவது சிறப்பாக இருந்தது.

மலாய் மொழியினை நான் கற்றுக் கொள்ள வேண்டுமானால், மலாய் இனத்தவரும் மாதிர் முகமதும் தமிழ் பேச வேண்டும் என்று வீண் வாதம் பேசுவோர் அங்கு இல்லை. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர். அஷர் தாம் ஆங்கிலேயராயினும் மலாய் மொழியில் தொடங்கி தமிழில் பேசும்போது 'தமிழ் கல்ச்சர்' என்னும் ஆங்கில ஆய்வு இதழினை 1954 - ஆம் ஆண்டு தொடங்கியதனையும் தமிழுக்குத் தொண்டு புரிந்த தாமஸ் பர்ரோ, பிலியோ சாட், தனிநாயகம், வரதராசனார் ஆகியோரை நினைவு கூர்ந்தார்.

தமிழகத்திலிருந்து சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த கலைஞரின் குரல் கரகரத்துப் போயிருந்தது — கீறல் விழுந்த தகரம் போல. "இரவில் விழித்துப்பயணம் செய்தேன்; இங்கு வந்த பின்னும் உறங்கவில்லை தமிழ் மாநாடு நடக்கும் போதாவது தமிழன் விழித்துக் கொண்டிருக்க வேண்டாமா!" என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார். "மாநாடு நடத்துகின்றவர்களுக்கு ஒரு முன்னாள் முதலமைச்சர் தான் கிடைத்திருக்கிறார்" என்ற போது குறிப்புப் பொருளை அனைவரும் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக சிரிப்பு அலைமோதியது. மூவேறு இனங்களும் நல்லுறவோடு வாழ்வதனைப் பாராட்டி விட்டு "உலக முழுதும் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் மலேசியாவில் தான் தமிழர்கள் வாழ்கிறார்கள்" என்று அறிஞர் அண்ணா கூறியதை நினைவு கூர்ந்தார்.

அடுத்துப் பேசிய மலேசிய அமைச்சர் தத்தோ சாமிவேலு ஏறத்தாழ ஐந்து நிமிடங்கள் மலாய் மொழியில் முதலமைச்சர் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றார். தங்கு தடையின்றி கணீ-ரென்ற குரலில் அவர் மலாய் மொழியில் பேசினார். அமைச்சர் சாமிவேலுவின் அயன்மொழி அறிவு இத்துணை ஆழமாகவும், அழுத்தமாகவும், இருப்பது நமக்கெல்லாம் ஒரு விதத்தில் பெருமை தானே! சரியான முறையில் உய்க்கப்பட்டால், உலகத்தையே கவரும் உன்னதத் திறமை படைத்தவன் தமிழன் என்பதற்கு அமைச்சர் சாமிவேலு ஒரு சான்று.

தமிழில் உரையாற்றும் போது உலகத் தமிழ் மாநாட்டினை முதன்முதலாக நடத்திய பெருமை மலேயாவுக்குத் தான் உண்டு என்று குறிப்பிட்டு, அதனை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவரும், காலஞ் சென்ற அமைச்சர்களுமாகிய திருஞானசம்பந்தம், மாணிக்க-வாசகம் ஆகியோரும் தமிழறிஞர் தனிநாயகமும் நம்மால் வணங்கத் தக்கவர்கள் என்றும் கூறினார். "தமிழ் ஒரு வட்டார மொழி அல்ல. தமிழைத் தமிழகம் என்ற பெட்டிக்குள் அடக்காதீர்கள். அது உலகமொழியாக்குதற்கு உரியதைச் செய்யுங்கள். நாங்களும் கை-கொடுக்கிறோம் தமிழினாலே உலகத்தை வளைத்துப்போட்டுக் கொள்ளுவோம் என்று சொல்லும் எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமே ஒழிய 'நாம் வரமாட்டோம்' என்று சொல்லுவது அழகல்ல'' என்றபோது மண்டபமே கைதட்டி ஆரவாரித்தது

தொடக்க விழாவின் கடைசி நிகழ்ச்சி மலேசியப் பிரதமரின் சொற்பொழிவு தான். மலாய் மொழியில் அவர் பேசும் போது இடையிடையே கைதட்டல் இருந்தது மலேசியத் தமிழர்களில் மிகப் பெரும்பாலோருக்கு அந்த மொழியும் தெரிந்திருக்கிறது என்பதற்கு அது ஒரு சான்று பிறகு ஆங்கிலத்தில் அவர் பேசியபோது தமிழ் ஒரு 'Melodious language of the world' என்று குறிப்பிட்டார். மாதிர் முகமதுவின் தந்தை வழிப் பாட்டனார் தமிழகத்திலிருந்து சென்ற முஸ்லீம் என்றும், அதனைக் காரணம் காட்டி அவரை ஒரு முழு மலாய் முஸ்லீமாக ஒத்துக் கொள்ளாத பிற்போக்கு வாதிகளும் அங்கு உண்டு என்று கேள்வியுற்றேன்,

மதிய உணவிற்குப்பின் மாலையில் சில கலை நிகழ்ச்சிகள் இருந்தன. இரவு 7 - மணியளவில் அதே வாணிப மையத்தில் இரவு

விருந்து. பல்லாயிரக்கணக்கான விருந்தினருக்கு ஒரே நேரத்தில் மேனாட்டு முறைப்படி மேஜை நாற்காலிகளில் அமரச் செய்து காய்கறி, புலால் உணவுகளைத் தனித்தனியே வேண்டிய அளவு பரிமாறினர். மாநாட்டு அமைப்பாளர்களின் பற்பல சாதனைகளில் இதுவும் ஒன்று. இந்த விருந்துக்கு பிரதமர் அவரது துணைவியாருடன் வந்து கலந்து கொண்டார். இருவருமே ஆங்கில மருத்துவர்கள். டத்தோ சாமிவேலுவின் துணைவியார் டத்தின் இந்திராணியும் வந்திருந்தார்.

நவம்பர் 16

மாநாட்டின் இரண்டாம் நாளாகிய இன்று முதல் 18-ம் நாள் வரை ஆய்வரங்க நிகழ்ச்சிகளைப் பல்கலைக்கழகத்தின் மூன்று வெவ்வேறு அறைகளில் ஏற்பாடு செய்திருந்தனர் ஆய்வாளர்களின் பெயரும் தலைப்பும் பிற விவரங்களும், எந்தெந்த அறையில் எந்தெந்த நிகழ்ச்சி என்பன போன்ற செய்திகளையும் அழகிய வழவழப்பான வெள்ளைத்தாளில் அச்சிட்டு ஒரு புத்தகமாகவே கொடுத்திருந்தனர். விரும்பியோர் விரும்பிய இடத்திற்குச் சென்று அமர்ந்து கேட்கலாம். எல்லா அறைகளும் குளிர் சாதனம் பொருத்தப்பட்டவை. நிகழ்ச்சிகள், அதனைத் தொடர்ந்து வந்த கேள்வி - பதில்கள் ஆகிய அனைத்தையும் எல்லா அறைகளிலும் ஒலி, ஒளிப்பதிவுகள் செய்தனர்.

ஆய்வரங்க நிகழ்ச்சிகள் ஒரு புறமிருக்க, விடுதிகளிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட பேருந்துகள் மூவேறு பகுதிகளுக்கு பேராளர்களை, அதிலும் குறிப்பாக வெளிநாட்டுக்காரர்களை ஏற்றிக் கொண்டு சென்றன. கடைத் தெருப் பகுதி, பத்துமலை முருகன் கோவில், நகர்ப்புறப்பகுதி என்று மூன்று பிரிவாகப் பிரித்துக் கொண்டனர். குளிர் சாதனம் பொருத்தப்பட்ட ஒவ்வொரு பேருந்திலும் தக்க வழி காட்டிகள் அமர்த்தப்பட்டிருந்தனர். பேராளர்கள் எண்ணிக்கை பெருகினால், அதற்கேற்றாற் போல் பேருந்துகளும் வந்து கொண்டு இருந்தன. வசதியான மெத்தைகள் அவற்றில் அமர்ந்து சிரமம் இன்றி வெளிப்புறக் காட்சிகளைக் கண்டு செல்ல வாய்ப்பாக இருந்தது அன்றாடம் இரவு 8 மணி முதல் 10-30 வரை கலை நிகழ்ச்சிகளையும் பல்கலைக்கழக துங்கு அப்துல் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். தமிழகத்திலிருந்து ஜெமினி கணேசன், சாருகாசன், சவுகார் ஜானகி, சேகர் போன்ற நடிக நடிகையர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இரண்டாம் நாள் மாலை 2 மணியளவில் பத்துமலை செல்லும் பேருந்தில் பயணம் செய்தேன். கோலாலம்பூர் நகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் பெருவழிப் பாதைக்கு அருகிலேயே உள்ளது பத்துமலை சுந்தரராஜன் என்பவரே எங்களது வழிகாட்டி. இவருடைய முன்னோர் திண்டிவனத்தைச் சார்ந்தவர்கள். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் நாட்டையும், தமிழகத்து அரசியலையும் குறை கூறிக் கொண்டேயிருந்தார். அரைகுறை ஆங்கிலத்திலும், தமிழிலும் விளக்கம் கூறிய போது கிடைத்த செய்திகளில் முக்கியமானது பத்துமலையைப் பற்றியதாகும் பாறைகளாலேயே ஒரு பெருங் கூடாரத்தை அமைத்தால் எப்படியிருக்குமோ அப்படி உள்ளது இந்த பத்துமலை. உச்சியில் ஒரு ஓட்டை. சூரிய வெளிச்சம் தாராளமாகக் கிடைப்பதால், வழிபாடு செய்வோருக்கு காற்றுக்குப் பஞ்சமில்லை அமெரிக்காவில் கிரான்ட் கன்யான் பகுதியில் இருப்பது போன்று பாறைப் படிவங்கள் ஆலம் விழுதுகளைப் போல் தொங்கிக் கொண்டுள்ளன. அடர்ந்த காடுகளுக்கிடையில் மறைந்து கிடந்த குகையினை 1885-ஆம் ஆண்டு கண்டுபிடித்துள்ளனர். அதில் ஒரு முருகன் கோயிலைச் சிறிய அளவிலாவது கட்டிவிட விரும்பி அதனை நிறைவேற்றியவர் தம்புசாமிப்பிள்ளை என்னும் தமிழர் நடந்த தைப்பூச விழா இங்கு நடக்கும் போது ஐந்து லட்சம் மக்கள் — எல்லா மதத்தினரும் கூடுவர் அரசினரே விடுமுறை அறிவித்து விடுவர் முகமதியமே அரசின் மதமாக இருந்தாலும், பிற மதத்தினருக்கு உரிமைகள் மறுக்கப்படவில்லை என்பதோடு கூட, வேண்டிய உதவிகளையும் அரசினர் செய்து வருகின்றனர்

பத்துமலை முருகனுக்கு நம் ஊரிலிருப்பது போன்ற மிகப் பெரிய கோவில் இல்லை ஏறத்தாழ இருநூறு படிகள் இருக்கலாம். அவற்றில் ஏறி ஹாலைப் போன்ற பாறையின் மேல் பகுதிக்குச் சென்றால் ஒரு மூலையின் உட்குழிந்த பகுதியில் ஒரு சிறிய கோவில் உள்ளது மூலவர் நமது ஊரில் உள்ள உற்சவரைப் போன்று அமர்ந்திருக்கிறார். அர்ச்சகர் தமிழர். கலிவெண்பாப் பாடல்கள் சிலவற்றை ஓதி வணங்கி விட்டு வந்தேன் வரும் வழியில் இரண்டு சிறு தொழிற்சாலைக்குக் கூட்டிச் சென்றனர்.

ஒன்று பாடிக் தொழிலகம். மலேயாவிலிருந்து வருபவர்களின் சட்டையைப் பார்த்தால் தெரிந்துவிடும் கச முசா வென்று பூப்-போட்டும் கட்டம் கட்டமாகவும் பல வண்ணங்களில் அமைந்திருக்கும்

அந்த சட்டைத் துணி, திரைச் சீலைகள், தாவணிகள், போர்வை-கள் ஆகியவற்றுக்கு அமைப்பும் வண்ணமும் இந்தத் தொழிற்சாலையில் தான் கொடுக்கின்றனர். 1957-ஆம் ஆண்டு மலாயா சுதந்திரம் பெற்ற பிறகு இந்தப் பாடிக் உடையினை அரசினரே அனுமதிக்கின்றனர். அரசினர் விழாகளுக்கும் விருந்துகளுக்கும் மேல் நாட்டு உடை மட்டுமின்றி இதனையும் அதிகாரப் பூர்வமாக அங்கீ-கரித்துள்ளனர். நாங்கள் சென்ற மற்றோரு தொழிற்சாலை தகரச் சுரங்கத்திலிருந்து வரும் உலோகத்தினைச் சிறு பாத்திரங்களாக்-குவது ஆகும் துருப் பிடிக்காமலும், கறுத்துப் போகாமலும் இருக்கும் இந்த உலோகத்தினை மெல்லிய தகடுகளாக அடித்து கூரை வேயவும், கொள்கலனாக்கவும், பயன்படுத்துகிறார்கள் மலேயாவின் செல்வ வளத்துக்கு தகரச் சுரங்கங்களும் ஒரு காரணம் ஆகும்.

நவம்பர் 17

பல்கலைக்கழகத்திற்குள்ளயே அமைந்துள்ள துங்கு மண்டபத்தில் 10-30 மணி வரை ஒரு சிறப்புச் சொற்பொழிவு. தலைமை வகித்தவர் டாக்டர் அஷர். பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுக்கும் சீனாவுக்கும் இருந்த வாணிக உறவு பற்றிய ஆய்வுச சொற்பொழிவினை நிகழ்த்தியவர் டாக்டர் நோபாரு காரஷிமா டோக்கியோ பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியர். இவரது ஆங்கில உச்சரிப்பு அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் இருந்தது கங்கை கொண்ட சோழபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பீங்கான் துண்டுகளும், பெரிய பட்டினம், காயல் பட்டினம் பகுதியில் அகழ்ந்-தெடுக்கப்பட்ட வெள்ளைக் களிமண்ணால் ஆன பாத்திரங்களும், குப்பிகளும் சீனாவில் செய்யப்பட்டவை எனும் கருத்தை ஆதாரமாகக் கொண்டு இவர் உரையாற்றினார். தமது ஆய்வுக்கு அரணாக இபின் படூடா எனும் 14-ஆம் நூற்றாண்டு பயணியின் நாட்குறிப்பு-களை மேற்கோள் காட்டினார்.

ஆய்வரங்க அறைகளில் அங்குமிங்குமாகப் பார்வையாளர்களும் பொதுமக்களும் போய் வந்த வண்ணம் இருந்தார்கள். சில அறை-களில் கூட்டமாகவும், சில அறைகளில் திட்டுத்திட்டாகவும் பார்வை யாளர் அமர்ந்திருந்தனர். நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பார்த்து விரும்பிய தலைப்பில் அச்சொற்பொழிவினைக் கேட்பதற்கு குறிப்பிட்ட நேரங்-களில் ஆங்காங்கே சென்று கொண்டிருந்தனர். ஆய்வுக்கு எடுத்துக்

கொள்ளப்பட்ட எண்பத்தெட்டு தமிழ்க் கட்டுரைகளையும், தமிழ் பற்றியதாக இருந்தாலும் ஆங்கிலத்திலே எழுதப்பட்ட தொண்ணூற்றாறு கட்டுரைகளையும் சுருக்கி 240 பக்கத்தில் ஒரு நூலாகவே அச்சிட்டுக் கொடுத்தார்கள். சிற்சில ஆய்வரங்க அறைகளில் ஆய்வாளர், தலைமையேற்போர், ஒளி ஒலிக் காட்சியர் ஆகியோரைத் தவிர ஒரு சில நேரங்களில யாருமே இல்லை என்றும் கேள்விப் பட்டேன் வெவ்வேறிடங்களில் படிக்கப்பட்ட கட்டுரையினை மீண்டும் அனுப்பி பிசைந்த மாவினையே பிசைகிறார்கள் என்ற குறைபாடும் சுட்டிக் காட்டப்பட்டது. இது உண்மை தான். எனக்கு அறிமுகமான ஓரிருவர் இப்பிழையினைச் செய்தனர் பல்லாயிரவர் கூடுகின்ற இம்மாநாட்டில், அதுவும் அயல்நாட்டில் அரிதின் முயன்று ஒரு ஆய்வுரை நிகழ்த்தாமல், வாய்ப்பினை ஒரு சடங்காகக் கருதி அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது

அறிவியல் துறையில் தமிழ் என்னும் பகுதியில் கணிப்பான் பற்றிய கட்டுரைகள். அதிகம் கேரளத்தில் இருந்தாலும் களரி வித்தை தமிழகத்தின் ஆதிக்கலை என்று நிறுவியது ஒரு கட்டுரை மலேசியத் தமிழ், சிங்கப்பூர் இதழியல், சிங்கள மொழியின் தூது காவியங்கள் இந்தோனேசியாவில் தமிழ்ச் சமயம் போன்ற பல்வேறு ஆய்வுச் சொற்பொழிவுகள் பற்பலரால் நிகழ்த்தப்பெற்றன.

செவ்வாய்க் கிழமை மாலை ஆய்வரங்கச் சூழலில் இருந்து விடுபட்டு நகர்வலம் வந்தேன். சாலைகளும், சந்து பொந்துகளும் கூட தூய்மையாகவும், இருபுறமும் பசிய புல் படர்ந்தும் அழகுற அமைக்கப் பெற்றுள்ளன. சுற்றுப்புறச் சூழலைக் கெடுப்போரும், குலைப்போரும் கடுமையான தண்டனைக்கு உள்ளாகின்றனர். மலேசியாவின் பாராளுமன்றக் கட்டிடம் 18 மாடிகள் கொண்டது. 28 மாதங்களில் கட்டி முடிப்பதாக ஒப்புக் கொண்ட ஜப்பானிய கட்டிடக் கலைஞர்கள் இரண்டு திங்களுக்கு முன்னதாகவே பணியினை நிறைவு செய்து விட்டார்களாம். செலவு 85 கோடி ரூபாய். 1963-இல் கட்டப்பட்ட இந்த பேரவையில் தான் 177 உறுப்பினர்களும் அமர்ந்து அந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கிறார்கள். மலேசியாவின் புகழ் பெற்ற வங்கிக் கட்டிடங்களும் இது போன்றே விண்ணை முட்டி நிற்கின்றன.

மலாய் தான் தேசிய மொழியென்றாலும், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகியவற்றுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்_

கின்றது. அண்மைக் காலந்தொட்டு பூமி - புத்திரர்கள் என்ற பெயரால் மலாய் இனத்தவருக்கு ஏராளமான சலுகைகளும், வசதிகளும் அளிக்கப்படுகின்றன. என்பதனால், மக்கட் தொகையில் அடுத்து வருகின்ற சீனர்களுக்கும், மலாய் இனத்தோருக்கும் போட்டியும் பூசலும் நிகழ்கின்றன. தமிழரைப் பொறுத்த வரையில், மிகச்சிறந்த மதிப்பெண் பெற்று உயர்தரத்தில் வந்தாலொழிய கல்வி வளர்ச்சிக்கோ பதவி பெறுதலுக்கோ வாய்ப்புகள் இல்லை 16 மில்லியன் மக்கட் தொகையில் பாதிப்பேர் மலாய் இனத்தவர். முப்பத்தைந்து விழுக்-காடு சீனரும், பதினோரு விழுக்காடு இந்தியரும், மீதம் பிற இனத்தவர் என்ற முறையிலும் மக்கட் தொகை அமைந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இன்றைய மலேசிய அரசு தமிழர்களின் பால் மற்றும் பாசமும் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை இந்தத் தமிழ் மாநாட்டிற்கே கூட மலேசிய அரசு 15 லட்சம் ரூபாய் அன்-பளிப்பாகக் கொடுத்தது என்பதை மாநாட்டிலேயே மகிழ்வுடன் அறிவித்தார்கள்.

பார்லிமெண்ட் கட்டிடம், பூமிபுத்ரா உலக வாணிப மையம் ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டே வந்த எங்களை அடுத்ததாக வரவேற்றது தேசீய அருங்காட்சியகம் ஆகும். இந்தோனிசியா பாலி கலாச்சாரங்களைப் பற்றிய பொம்மைகள், திரைச் சீலைகள் அழகுற வைக்கப்பட்டுள்ளன. சீன நாட்டுக் கட்டிடக்கலை, சீனர் தம் திருமண முறை ஆகியவற்றின் காட்சி, பொருள் அமைப்பு நேரிற் பார்ப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. மலாக்கா செட்டிகள் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஓரிடத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்-திலிருந்து கடல் வாணிபம் செய்யச் சென்ற இவர்கள்தான் அந்-நாட்டில் முதலில் குடியேறியவர் ஆவர். பெயர்கள் எல்லாம் தமிழா-யினும், இவர்களுக்கு இப்போது தமிழ் தெரியாது. மலாக்காவில் இன்றும் இருக்கும் இவர்கள் ஒரு சிறிய தனிச் சமூகமாகவே அங்கு வாழ்கிறார்கள். 1931- ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நேசன் பத்திரிகை ஒரு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. தென் கிழக்காசிய நாடுகளில் இந்தியக் கலாச்சாரம் எப்படி ஊடுருவியுள்ளது என்பதை ஆய்வு செய்ய விரும்புவோர்க்கு இக்காட்சியகம் பெரிதும் பயன் விளைவிக்கும்.

அருங்காட்சியகத்தை விட்டு வெளிப்போந்த எங்களை சொ. சுப் பேருந்து லே அம்பாங் எனும் கடைத்தெருப் பகுதிக்கு அழைத்துச்

சென்றது தமிழகத்துச் செட்டிமார்களின் வட்டிக்கடைகள் அங்கும் இங்கும் தெரிகின்றன மளிகைக் கடைகள் சிலவற்றில் தமிழில் பெயர்பலகைகள் தென்பட்டன. நவீன அங்காடிகளும் ஆடம்பரமாக இருந்தன ஆனால் நாங்கள் யாரும் எந்தப் பொருளையும் வாங்க-வில்லை. கோலாலம்பூரை விட சிங்கப்பூரில் தான் அனைத்துப் பொருள்களின் விலையும் மலிவு என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. கடைத்தெருவெல்லாம் சுற்றிவிட்டுத் திரும்பும்போது இரவு மணி எட்டு.

நவம்பர் 18

சுவாமி விபுலாநந்தரின் மதங்க சூளாமணி பற்றிய எனது கட்டுரையினைப் படிக்கச் சென்றேன். குறிப்பிட்ட நேரத்திற்குச் சென்றதால், முன்னதாகவே என் பெயரைக் கூப்பிட்டுப் பார்த்து நான் வரவில்லை என்று முடிவு செய்திருந்தனர் போலும். நான் அறையில் நுழைந்த போது தலைவர் பேசிக்கொண்டிருந்தார். இஸ்லாமியக் காப்பியங்களைப் பற்றிச் சரமாரியாக இருந்தது அவரது சொற்பொழிவு. பேச்சின் இடையிலேயே "நான் சற்று அதிக நேரம் எடுத்துக் கொள்கிறேன். அதற்கும் இன்று வருவதாக உள்ள இரண்டு பெருமக்கள் வாரமலே எனக்குத் துணை புரிந்துள்ளார்கள்' என்று சொல்லி முடித்தது தான் தாமதம். சடக் கென்று நான் எழுந்து "மன்னிக்கவும்: ஒருவர் தான் உங்களுக்குத் துணைபுரிந்துள்ளார்; நான் வந்துவிட்டேன்"- என்றேன். அவர் சொன்ன வேகமும், நான் சொன்ன பதிலும் பார்த்து அரங்கத்தில் உள்ளோர் சிரித்து விட்டார்கள். பிறகு நான் தலைவருக்கு அருகில் அமர்த்தப்பட்டேன். என்னைப் பேச அழைத்தார்கள். கட்டுரை ஆங்கிலமாதலின், ஆங்கிலத்திலேயே பேசத் தொடங்கினேன். சில மணித்துளிகள் ஆகியிருக்கும். முன் வரிசையில் இருந்த தமிழக அரசியல் தலைவரும் முஸ்லீம் லீகைச் சார்ந்தவருமாகிய அப்துல் ஸமது அவர்கள் "தமிழிலேயே பேசினால் எல்லோருக்கும் புரியும்' என்று கூறினார். 40 மணித்துளிகளுக்குக் குறையாமல் பேசினேன் இடையிடையே கைதட்டலும் சிரிப்பும் இருந்தமையால், வெளிவராந்தாவில் நின்று கொண்டிருந்தவர்களும். அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தவர்களும் எங்களது அறைக்குள் நுழைந்து எனது சொற்பொழிவினைக் கேட்டனர். சுருங்கக் கூறின், நிகழ்ச்சி முடிந்த பிறகு பற்பலர் தாங்களாகவே வந்து அறிமுகமா-யினர் அப்படி அறிமுகமான திரு. கார்த்திகேயன் என்னும் மின்

பொறியாளரே சில தினங்கள் கழித்து சிங்கப்பூர் முழுதும் என்னைத் தனது காரிலேயே சுற்றிக் காண்பித்தவர். அண்ணாமலை பல்கலைக் கழகத் துணை வேந்தரது மகளும் என்னை மனமுவந்து பாராட்டி-யவர். இவர் சிங்கப்பூரில் இருப்பவர். அமைச்சர் பத்மனாபன் அவர்களது செயலாளர் மணிசேகரன் மலேசிய நாடகங்கள் பற்றித் தாம் எழுதிய நூலைக் கொடுத்து என்னைப் பெரிதும் பாராட்டினார்.

மதிய உணவுக்குப்பின் பேருந்துப் பயணம். கோலாலம்பூரில் இருந்து 25 மைல் தூரத்தில் உள்ள ஒரு ரப்பர் தோடத்துக்குச் சென்றோம். ரப்பர் பால் வடிக்கும் முறையினைக் காட்டிய பிறகு ரப்பர் தொழிற்சாலைக்கு அழைத்து வந்தனர் கெட்டியான ரப்பர் பாலைப் பக்குவப்படுத்தி சிறு சிறு பேல்களாக வரும் வரை அதனுடைய மாற்றங்களை நேரடியாக விளக்கிச் சொன்னவர் ஒரு சீன அலுவலர். ஒரு டன் மூலப்பொருள் ரப்பரின் விலை ரூ 2680/ மலாயாவில் மட்டும் ஐம்பது லட்சம் ஏக்கரில் ரப்பர் பயிராகிறது. அத்தோடு பாமாயில் மரங்களும் ஏராளமாக வளர்ந்துள்ளன உலகத்-தின் பாமாயில் தயாரிப்பில் மூன்றில் ஒரு பங்கு மலாயாவில் கிடைக்-கிறது. இந்த இரண்டு பயிர்களும் செழித்து வளர்வதற்குக் காரண-மாக இருப்பதே மழை. ஆண்டு ஒன்றுக்கு 110 அங்குல மழை பெய்கிறது. மலாயா நாட்டின் மண்வளத்திற்கும் பணப்பெருக்கத்-திற்கும் வேறு விளக்கம் தேவையில்லை.

ரப்பர் பாக்டரிக்கு அருகிலேயே உள்ள சுங்கைச் சோ எனும் காலனியில் ஒரு தொடக்கப் பள்ளியில் எங்களுக்கு தேநீர் விருந்தும் வரவேற்பும் அளிக்கப்பட்டது. காலனியை எங்கள் விருப்பம் போல் சுற்றிப்பார்த்தோம் நாங்களாகவே சிற்சில வீடுகளுக்கும் சென்று உரையாடினோம். அங்கிருக்கும் தமிழர்கள் இரண்டு தலைமுறைக்கு முன் வந்தவர்களாக இருந்தார்கள். முதியவர்கள் சிலரே ஏதோ ஒரு சில உறவினர்கள் தமிழ் நாட்டில் இருப்பதாகவும் பற்பல ஆண்டு-களுக்கு முன் சென்றுவந்ததாகவும் குறிப்பிட்டனர். பள்ளி மாணவ, மாணவியரைக் கேட்ட போது அவர்கள் அனைவரும் மலாய், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் கற்று வருவதாகக் கூறினர். மும்மொழித் திட்டத்தை எதிர்க்க முடியாது; எதிர்த்தாலும் நஷ்டம் நமக்குத்தான் என்பதை உணர்ந்துள்ளார்கள் வாழ்க்கைத்-தரம் சிறப்பாக உள்ளது. பற்பல வீடுகளில் டிவி காணப்படு-கிறது ஆங்காங்கு கார்களும் காணப்படுகின்றன இளைஞர்களில் பெரும்பாலோரிடம் ஹோண்டா மோட்டார் சைக்கிள் உள்ளது. சைக்-

கின் அதிகமாக இல்லை. தொழிலாளர் காலனியாக இருந்தாலும் சுத்தமாக உள்ளது. ஆங்காங்கே சீன, மலாய்க் குடும்பங்களும் உள்ளன.

அந்தத் தோட்டத்து மேலாளர் என்னை மட்டும் தனது காரில் அழைத்துக் கொண்டு கோலாலம்பூரில் அமைச்சர் தத்தோ சாமிவேல் இல்லத்தில் விட்டு விட்டுச் சென்றார். ஏறத்தாழ முப்பது பேருக்கு அமைச்சர் வீட்டில் இரவு விருந்து கொடுத்தார்கள். அமைச்சர் வீட்டின் முன்பகுதியில் நீச்சல் குளம் ஒன்று உள்ளது. மலாய்த் தமிழர்கள் அமைச்சரைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவரது துணைவியார் இந்திராணி தமிழ்நேசன் பத்திரிகையின் பொறுப்பினை ஏற்றுள்ளார். செல்வ வளத்தில் மிதந்தாலும் அமைச்சர் ஏளிமை-யாகவும், இனிமையாகவும் பழகுகிறார். விருந்து மூடிந்து விடுதிக்கு வந்த போது இரவு மணி பத்து.

நவம்பர் 19 :

அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தரின் 'அறிவியல் தமிழ்' என்னும் தலைப்பில் ஒரு சொற்பொழிவோடு காலை நிகழ்ச்சி-கள் தொடங்கின. பதினோரு மணி அளவில் பொதுப்பணி அமைச்சர் டத்தோ சாமிவேலு, பிற அமைச்சர்களான சுப்பிரமணியம், டத்தோ பத்மனாபன் ஆகியோர் மேடைக்கு வந்தனர். சொற்பொழிவாற்ற வாய்ப்புக் கிடைக்காதோரும், மாநாடு பற்றிய தங்கள் கருத்துரையைக் கூற விருப்புவோரும் மேடைக்கு வந்து பேசலாம் என்று அறிவித்-தனர். புற்றீசல் போல ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டே-யிருந்தனர். மாநாட்டினைப் புகழ்ந்தோரும், அமைச்சர்களையும் அரசினையும் புகழ்ந்தோரும் ஏராளமானோர். உலகளாவிய ஒரு மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியமைக்கு எவ்வளவு புகழ்ந்து உரைத்தாலும் தகும் என்றே அனைவரும் கூறினர்

மதிய உணவுக்குப்பின் மாநாட்டு நிகழ்ச்சிக்கு ஒத்துழைத்த தலைவர்கள், தொண்டர்கள், பேராசிரியர்கள் ஆகிய அனைவரை-யும் பேராளரையும், பொதுமக்களையும், தனது சக அமைச்சர்களை-யும் டத்தோ சாமிவேலு அவர்கள் பாராட்டினார். தமிழ் ஆராய்ச்சிக் கென்று ஒரு நிதி தொடங்குவதாலும் அதற்கு முன் தொகையாகத் தனது நான்கு மாத ஊதியமாகிய 50,000 மலேசிய டாலர்களைக்

கொடுத்துவிட்டேன் என்றார். அவரது மனைவியார் நடத்தும் தமிழ் நேசன் சார்பாக 25 ஆயிரம் என்று கூறி மாநாட்டிலேய தனிப்பட்டோரும் கொடுக்கத் தொடங்கிய போது ஒரு லட்சத்துப் பதினாயிரம் டாலர்கள் சேர்ந்து விட்டன, நிறைவு விழா ஆதலின் மண்டபம் முழுதும் கூட்டம் நிறைந்திருந்தது. முதல் நாளே மலேசியக் குழுவினர் தயாரித்த மலர் கொடுக்கப்பட்டிருந்தது. நெருங்கிய நண்பர்களுக்கெல்லாம் வணக்கமும் வாழ்த்தும் தெரிவித்து விடைபெற்றுக் கொண்டேன். மறுநாள் காலை 9 மணி விமானத்தில் சிங்கப்பூர் வந்தேன்.

சிங்கப்பூர் : நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மலேசிய சுல்தானுடைய தீவு. கொசுக்கள் நிறைந்த ஒரு காடு. உலக முழு-தாண்ட ஆங்கிலேயர்கள் அங்கும் ஒரு வாணிகத்தலம் ஏற்படுத்தினர். சீனாவுக்குக் கடல்வழி போகும்போது அங்கு தங்கிச் சென்றனர். மலேசியாவும் சிங்கப்பூரும் அவர்களது ஆளுகைக்கு வந்தது. இரண்டாவது உலகப்போரின் உச்சகட்டத்தில் மூன்றாண்டு காலம் இத்தீவு ஜப்பானியர் கைப்பட்டது அப்போதுதான் சுபாஷ்சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்துக்கு அங்கு சென்று ஆட்களைச் சேர்த்தார். அவையெல்லாம் இப்போது வெறும் வரலாற்றுச் செய்திகள்.

இன்றைய சிங்கப்பூர் அரசியல் நேர்மைக்கும், கட்டுப்பாடான பொது வாழ்விற்கும், தூய்மைக்கும் இருபபிடம். சிங்கப்பூரின் துறைமுகப்பகுதியை மட்டும் பார்த்தால் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளுக்குப் பிறகு வளர்த்து வருகின்ற ஒரு பெரிய நகரமாக அதனைக் காணமுடிகிறது.

சீனர்களே முக்கால் பகுதி. பத்து விழுக்காடு அளவில்தான் இந்தியர். குடியுரிமை பெற்று வாழும் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் சிறப்புற வாழ்கின்றனர். செரங்கூன் வீதியில் தமிழன் வணங்கும் மாரியம்மனையும், காளியம்மனையும் சிவன் கோவிலையும் காணமுடிகிறது. அருமைச் சகோதரரும், மின்னியல் பொறியருமான கார்த்திகேயன் சிங்கப்பூரையும், அதற்கு அருகேயுள்ள சுற்றுலாத்தலமான சென்டோசா தீவினையும் தமது காரிலேயே சுற்றிக் காண்பித்த பேரன்பினை நான் மறக்க முடியாது. இரண்டு வாரங்கள் தங்கி சுற்றிப்பார்த்த இனிய நினைவுகளோடு விமானம் ஏறி சென்னை வந்தடைந்தேன்.

அழகு நடை

ப. முத்துசாமி, எம்.ஏ., எம்.எட்.

1. அழகுத் திருவடிவம் நளினக் கலைநடையில்
அறிவைக் கலங்கவைக்கும் ஆடல் - அவள்
பழகப் பழகவொரு புதுமைச் சுவையளித்துப்
பயிலும் நறுந்தமிழின் பாடல்.

2. உழைப்பில் உருத்திரண்டு மழைக்கண் அருள்கனிந்து
படைக்கும் கலையழகு நடையாள்—அவள்
தழைக்கும் கரியகுழல் புரளக் களிமுறுவல்
தவழும் நறுமலரின் தொடையாள்.

3. கந்தல் எளிய நடை கருவம் மிகுந்தநடை
கன்னி களிதுவங்கும் பருவம்—அவள்
சங்கத் தமிழ்பயிலச் சொந்தக் கலைநடையில்
சிந்துக் கவிபடைக்கும் உருவம்

4. முடியில் விறகுசுமை இடையில் எளியவுடை
அடியில் புழுதிபடி கோலம்—அவள்
நடையில் நளினநடை இளமை எழில்குலுங்கப்
படையில் மதனைவெல்லும் சீலம்.

ஆரம்பக்கல்வியிலும் கம்ப்யூட்டர்

வளர்ந்து வரும் அறிவியல் உலகில் கணிப்பான்கள் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. அதற்கென்று ஒரு மொழி; அதனைச் செயற்படுத்த ஒரு கருவி. 1985 - ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க நாட்டில் ஆரம்பப் பள்ளிகளில் சிறிய அளவிலான கணிப்பான்களை வகுப்பறைகளில் பொருத்தி பயிற்சி கொடுக்கின்றனர். கல்விக் கூடங்களுக்கு ஏற்றவாறு இவற்றைத் தயாரித்த பெருமை மெசாசுசெட்ஸ் கணிதப் பேராசிரியர் செய்மூர் பேப்பர்ட் என்பாரைச் சாரும்.

தமிழ் இலக்கியம் காட்டும் பெண்களின் சமுதாயத் தாழ்நிலை

டாக்டர். தா. ஈசுவரபிள்ளை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

1. முன்னுரை

ஒரு சமுதாயத்தைப் பற்றி-அதன் பண்பாடுகளைப் பற்றி, அறிய முயலும் போது, அச்சமுதாயத்தின் அச்சுப் போன்று விளங்கும் பெண்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் ஒரு சமுதாயம் பெண்களுக்கு எந்த அளவுக்கு உரிமைகள் கொடுத்திருக்கின்றது. மதிப்பு அளித்திருக்கின்றது என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அதன் நாகரிக, பண்பாட்டு மேன்மைகளை அளவிட முடியும் (எஸ். வையாபுரிப் பிள்ளை, "புறநானூற்றுத் தமிழர்" புறநானூற்றுச் சிந்தனைகள், ப : 53).

சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களைப் பயிலும் போது பெரும்பாலும் பெண்கள் அறிவிற் சிறந்தவர்களாகவும், தாய்மை, வீரம், கொடை இவற்றில் மேம்பட்டவர்களாகவும், குடும்ப வாழ்க்கையைத் திறம்பட நடத்தும் ஆற்றல் மிக்கவர்களாகவும், விருந்தோம்பும் நற்பண்புடையவர்களாகவும், தொழத்தக்க சிறப்புடையவர்களாகவுமே காட்டப்பெறுகின்றமையை அறியலாம். எனினும், சில சமுதாய, பொருளாதார சமயக காரணங்களால் பெண்கள் சமுதாயத் தாழ் நிலையில் வாழ்ந்துள்ளனர் எனவும் கருத இடமுள்ளது இக்கருத்தை விளக்குவதே இவண் நோக்கமாக அமைகின்றது.

2 சமூக இன்னல்களுக்குள்ளாதல் :

2 1 கைம்மை நோன்பு மேற்கொள்ளல் :

கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு மேற்-

கொண்டமையைப பெண்ணினம் அனுபவித்த சமூகக் கொடுமை எனலாம் (ந சுப்பிரமணியன். தமிழக வரலாறு - 1965 வரை, ப. 268). இக்கொடுமை அடிமை வாழ்வை விடவும் இழிவான-தாகவே காணப்படுகின்றது அடிமைகள் சுதந்திரமின்மை, வறுமை, பிறருக்குத் தொண்டு செய்தல் என்னும் நிலைகளில் துன்புற்றனர். ஆனால் கணவனை இழந்த பெண்களோ வாழ்நாள் முழுதுமே துன்பம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். கணவன் இறப்பதற்கு முன்னர் இறப்பை எய்திய பெண்களே கொடுத்து வைத்தவர்கள் என எண்ணுமளவுக்கு இவர்கள் நிலை காணப்பட்டது. (K. Nilakanta Sastri, South Indian History, P. 135) இவர்கள் அணிகலன்கள் அணிதல் கூடாது (புறம் 238 : 6-7, 261 : 17, 280 : 14 - 15); அல்லி அரிசி உணவை உண்ண வேண்டும் (புறம் : 280 : 11 - 15); தலை முடியை மழிக்க வேண்டும் (புறம் 25 : 10 - 14, 260 : 16, 280 : 11 - 15); பூக்களைச் சூடுதல் கூடாது (புறம் : 44 : 6 - 7); வெற்றிலை உண்ணக் கூடாது, நெய் தீண்டக் கூடாது. பாயில் படுக்கக் கூடாது (புறம் : 347 : 4 - 10) என்பன போன்ற தடைகள் விதிக்கப்பெற்றமை தெரிய வருகின்றது. சிலம்பில் கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்த கண்ணகி கணவன் இறந்தபின் கைம்மை நோன்பு நோற்கும் பிற மகளிரைப் போல் நானும் என் கணவனை இழந்து அவலமுறுவேன் என அரற்றுகின்றாள் (18 : 39 - 43) பெருங்கதையில் உதயணன் ஆட்சிப் பொறுப்பேற்றதும் பகை மன்னனின் தேவியருள் உடன்கட்டை ஏறாது, கைம்மை நோன்பு மேற்கொண்டவர்களுக்கு உதவும்படி ஆணையிட்டமை காட்டப் பெறு-கின்றது. (வத்தவ 1 : 26 - 28) சிந்தாமணியில் கைம்மைப் பெண்கள் அணிகலன்கள், குங்குமம், மலர் முதலிய மங்கலப் பொருள்களை இழந்தும் கண்ணீர் வடித்தும் செண்பகப்பூ வாடலை ஒத்தும் துயறுரும் காட்சி தீட்டப்பெற்றுள்ளது. (பூமகள் : 23, கனக; 42) இவ்வாறு பெண்கள் துயருறுகின்றமையைப் பெண்ணினம் அனுபவித்த இன்னல்கள் எனச் சமூகம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இவற்றால் கணவனை இழந்த பெண்கள் ஆதரவற்ற, வறட்டு வாழ்க்கைக்குத் தள்ளப்பெற்றனர். பழங்கால இந்தியாவிலும் கைம்மை நோன்பு நீதி நூல்களால் வலியுறுத்தப் பெற்றிருந்தது. கணவனை இழந்த பெண்கள் பரிசுத்தமான கிழங்கு, பழம் இவற்றையொத்த உணவை உண்டு காலத்தைப் போக்க வேண்டும் என மனு விதிக்கின்றது (மனு 5 : 157).

2. 2 தீப்பாய்தல் :

கணவனை இழந்த பெண்கள் அவனுடைய ஈமத்தீயில் தாமும் வீழ்ந்து உயிர் துறக்கும் கொடிய நிலைக்குள்ளாயிருந்தனர். இதை வடமொழியிப் 'சதி' என்பர். தீப்பாய்தல் என்பது விதவைப் பெண் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் நிலை (Self immolation of widows) என்ற வரலாற்றுப் பொருளைத் (Historical meaning) தருகின்றது. (M. Arunachalam, 'sati cult in Tamil Nadu, 'Bulletin of the Institution of Traditional culture, P. 60). சங்க இலக்கியத்தில் பூதப்பாண்டியனின் பெருங்கோப்பெண்டு தீப்பாயும் போது கூறியதாக வரும் கருத்துக்கள் கைம்மை வாழ்க்கையில் இன்னல்களையும் கொடுமைகளையும் குறிப்பதுடன் அக்காலத்தில் தீப்பாய்வதால் கணவனை இழந்த பெண்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறு தீப்பாய்வதால் கணவனை இழந்த பெண்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறு தீப்பாயுமாறு அவர்களை வற்புறுத்தியமைக்கும் சான்றுகள் இல்லை. இதனால், கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்று அல்லலுறுவதைவிட இறப்பதே மேல் என்று எண்ணியே இவர்கள் தீப்பாய முனைந்தனர் எனக் கூறலாம். ஆனால். வடமொழி விஷ்ணு ஸ்மிருதியில் "கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ இயலாதெனில் தகனபீடம் ஏறுவதே மேல்' என அறிவுரை கூறுகின்றது. சிலப்பதிகாரம் (18: 39 43), பெருங்கதை (வத்தவ : 1: 26 -28), சிந்தாமணி (பூமகள் : 23) ஆகியவற்றிலும் தீப்பாய்தல் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

2.3. கோலால் அடிக்கப்பெறுதல் :-

சமூகத்திற்குத் தேவையான நீதிகளைக் கூறும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றவையே பதினெண் கீழ்க் கணக்கில் இடம்பெறும் நீதி நூல்கள். இவற்றுள் திரிகடுகம் அறியாமையால் வரும் கேடுகளுள் ஒன்றாக இல்லாளைக் கோலாற் புடைத்தலையும் கூறுகின்றது (3) இதனால் சமுதாயத்தில் பெண்கள் கணவனால் அடித்துத் துன்புறுத்தப்பெற்ற நிலையில் வாழ்ந்துள்ளனர் எனத் தோன்றுகின்றது பழங்கால இந்தியாவில் கணவன் கொடுமைக்கு அஞ்சிப் பெண்கள் தாமாகவே பிறரிடம் அடைக்கலம் அடைந்து அடிமை வாழ்வு வாழ்ந்தமையையும் அறியமுடிகிறது.

இவற்றால் பெண்கள் கைம்மை வாழ்வு, தீப்பாய்தல், கணவனால் துன்புறுத்தப்பெறல், கணவனில் கொடுமைகளுக்குள்ளாதல் என்னும் சமூக இன்னல்களுக்குள்ளாயிருந்தனர் என்பது புலப்படுகிறது.

3 உரிமையற்ற நிலை :-

தமிழிலக்கியங்கள் பெரும்பாலும் பெண்கள் பல உரிமைகளைப் பெற்றிருந்தனர் என்றே காட்டுகின்றன. எனினும், சில நிலைகளில் அவர்கள் உரிமையற்றே வாழ்ந்துள்ளனர் என்பதையும் உணரமுடிகின்றது.

3. 1 அரசியலில் பங்கு கொள்ளும் உரிமை இன்மை :-

அரசியலில் பெண்கள் பங்கு கொள்ளும் உரிமை பெற்றிருந்தமைக்கு இலக்கியச் சான்றுகள் காணப்பெறவில்லை அரண்மனையில் மன்னருடன் வீற்றிருக்கும் பேறு பெற்றிருந்தனரே அன்றி அவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொண்டமையையோ முடிசூடியமையையோ அறியமுடியவில்லை. எனவே, பெண்கள் சமூக வாழ்க்கையில் பங்கேற்க இயலாத இரண்டாம் நிலை மதிப்பையே பெற்றிருந்தனர் எனக் கருதுவர் (Chopra : History of South India. PP. 56-57.)

3. 2 கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இன்மை :-

சங்க இலக்கியம், பெண்கள் பெரும்பான்மையும் தாம் நினைத்த ஆடவனையே மணந்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர் என்றே காட்டுகின்றது. ஆனால், சிந்தாமணியில் சீவகனை அவன் தோழர்கள் காமன் எனக் கூறி வியக்கும்போது புத்திசேனன் என்பவன் "தம்மால் விரும்பப்பெறும் தன்மையிலராய, நல்ல குரங்கினியல்பை உடையவராயிருப்பினும், தம் பெற்றோர் கொடுப்பராயின் நற்குடிப் பிறந்தோர் மனம் ஒப்பி அவரையே வழிபடுவர்" என்கிறான். (சுர 3). இது, பெண்கள் தமக்கு எவ்வித உரிமையுமின்றிப் பெற்றோர் கூறிய ஆடவனையே மணக்கும் நிலையில் காணப்பட்டமைக் குறிப்பதாகக் கொள்ளலாம்

3. 3. ஆண்-பெண் சம உரிமை இன்மை:-

எல்லா இலக்கியங்களும் பெண்களின் கற்பின் இன்றியமையாமையைப் பேசுகின்றன பெண்களின் கற்பை வலியுறுத்தும் சமுதா

யம் ஆடவர் கற்பைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. ஆடவர்கள் பல பெண்களை மணப்பதற்கும் சமுதாயமே இசைவு கொடுத்துள்ளது. ஆடவர்க்கு மனைவி, காமக்கிழத்தி, பரத்தை எனப் பல பெண்களுடன் உறவு காணப்பட்டது. சங்க இலக்கியத்தில் கரிகாற்சோழன், ஆய் அண்டிரன் முதலியோர் பல மனைவியரைக் கொண்டிருந்தமையையும், சிலம்பில் கோவலன் மாதவியுடன் உறவு கொண்டிருந்தமையையும், பெருங்கதையில் உதயணன் வாசவதத்தை, பத்மாவதி, மானனீகை போன்ற மனைவியரைக் கொண்டிருந்தமையையும், சிந்தாமணியில் சீவகன் பல பெண்களை மனந்தமையையும் சான்றுகளாகக் கொள்ளலாம் அதே நேரத்தில் கணவனுக்குத் தவறிழைத்த பெண்கள் மணல் நிரப்பிய குடத்துடன் கட்டப்பட்டு நீரில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டமையைச் சாங்கியத்தாய் வரலாறு உணர்த்துகின்றது (உஞ்சை: 36 : 160 - 161). இவ்வாறு ஆடவர்கள் பல பெண்களை மணத்தலும் பல பெண்களுடன் உறவு கொள்வதும் உண்மையில் அடிமை முறையின் விளைவே எனக் கருதப்பெறுகின்றது (எங்கெல்ஸ், குடும்பம், தனிச் சொத்துரிமை, அரசு, ஆகியவற்றின் தோற்றம், ப. 97) இதனால் தான் வள்ளுவரும் திருக்குறளில் பலதார மணத்திற்கெதிராக ஒருதார மணத்தை குறிப்பாக உரைத்தும், வரைவின் மகளிர் கூட்டுறவை வெறுத்தும், பிறனில் விழையாமையை வலியுறுத்தியும், பரத்தையர் பிரிவு பற்றிக் கூறாமலும், பெண்மைக்கு மதிப்பளிக்கின்றார் எனலாம். கற்பு நிலை என்று சொல்ல வந்தால் அதை இருபாலார்க்கும் பொதுவில் வைப்போம் எனக் கூறிய பாரதியின் கருத்தும் இவண் குறிப்பிடற்குரியதாகும்.

3.4 கணவன் தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை இன்மை.

கணவன் பல பெண்களுடன் உறவுகொள்வதைத் தட்டிக் கேட்கும் உரிமை இன்றிக் கண்ணீர் வடிக்கும் நிலையிலேயே பெண்கள் காணப்பட்டனர். பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியின் நிலையைச் சான்று காட்டலாம் (புறம். 143-147) மாதவியுடன் வாழ்ந்து, கைப்பொருள்களை இழந்து, மீண்டும் கண்ணகியை அடைந்த கோவலனைக் கண்ணகி வரவேற்றுச் சிலம்பினைக் கொடுக்கின்றமையையே சிலப்பதிகாரத்தில் காண்கின்றோம் (9:72 - 73). உதயணன் மானனீகை பால் காதல் கொண்டதை அறிந்தவிடத்து அவனைக் கண்டிக்கும் உரிமையின்றி வாசவதத்தை மானனீகையின் கூந்தலையே அரிய முற்படுகின்றாள் (வத்தவ : 14 4-7). இதனால்

ஆடவர் தவறு செய்யினும் பெண்டிரே தண்டிக்கப்பட்டனர் என்பதும் தெரிகின்றது.

4. கட்டுப்பாடுகளுக்குள்ளாக்குதல் :

4 1. கணவனுக்குக் கட்டுப்படுதல் :-

கணவன் எத்தகையவனாக இருப்பினும் எத்தகைய தவறு-களைச் செய்யினும் அவனுக்குச் கட்டுப்பட்டே நடக்க வேண்டும் எனப் பெண்கள் வலியுறுத்தப் பெற்றிருந்தனர் எனலாம். கணவனை மனைவி எதிர்க்கக்கூடாது; அவ்வாறு அடங்கி வாழாத மனைவி அவனுக்குத் துன்பம் தருவாள் என இன்னா நாற்பதும் (2). அவனுக்கு மனநோயைக் கொடுப்பாள் என சிறு பஞ்சமூலமும் (60) அறிவுறுத்துகின்றன. பெருங்கதையில் மானனீகையின் கூந்தலை அரிய முற்படும் வாசவதத்தையைக் கண்ட பத்மாவதி கணவன் செய்யத்தகாத செயல்களைச் செய்யினும் பெண்களாகப் பிறந்தவர்க்குப் பொறுமையே பெருமை என அறிவுரை கூறுகின்றாள் (வத்தவ14 : 98 - 99). இவை பெண்கள் கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டமையைச் சுட்டுகின்றன. சீவகன் பவதத்தனிடம் பெண்களின் இயல்பைக் கூறும்போது கணவன் சாத-லிற் சாதலும் நோதலின் நோதலும் கணவன் நீங்கினால் மலரணி-தலன்றித் தானும் அழகும் தனித்துக் காமன் என்ற பெயரையும் கூறாது கணவனையே வணங்கி வாழும் பெண்கள் அவனுக்குத் திலகம் ஒப்பர் என்கின்றான் (கனக : 42) இக்கூற்றுக்கள் பெண்கள் தமக்கென எவ்வித விருப்பும் வெறுப்பும் இல்லாதவர்கள் என்பதை-யும் கணவனின் உடைமைப் பொருள்கள் என்பதையும் நிறுவுகின்றன.

4. 2. நீதி மன்றம் செல்லத் தடை :-

காண்பதற்கு அரியவை எவையெவை எனக் கூறும் திரிகடுகம் பெண்கள் வழக்குத் தொடுத்து அவைக்குச் செல்லும் சாட்சியைக் குறிப்பிடுமாற்றால் (70) பெண்கள் உரிமை வேண்டியும் நீதிமன்றம் செல்லத்தடை விதிக்கப் பெற்ற நிலை புலனாகின்றது.

5. இழி பிறவியினராகக் கருதப்பட்ட நிலை :-

சங்க இலக்கியம் பெண்மையைப் பெரும்பான்மையும் அன்பாக, அருளாக, தூய்மையாக சிறப்பாகவே கருதியது. ஆனால் நீதி

நூல்கள், சிலம்பு, சிந்தாமணி ஆகியவற்றில் சமயக் கொள்கைகளின் தாக்கங்களால் பெண்கள் இழி பிறவியினராகவும் வெறுக்கத்தக்கவர்களாகவும் கருதப்பெற்ற நிலை வெளிப்படுத்தப் பெறுகின்றது. நீதி நூல்களில் பெண்கள் விரும்பத்தக்கவர்களாய் காட்டப் பெறுவதைவிட வெறுக்கத்தக்கவர்களாகவே மிகுதியும் காட்டப்பெறுகின்றனர். ஆடவர் தம் மன நிறையைக் காப்பதற்குப் பெண்களை மூங்கில் போலக் கருதி ஒதுக்க வேண்டும் (சிறு : 53); பெண்டிரை விரும்புவோர்க்கு எளிதில் பழி வந்து அடையும் (முதுமொழி : எளியபத்து : 8); பெண்கள் மீது காதல் கொண்டவர்க்கு மேலுலகம் செல்லும் வழி இல்லை (நாலடி : 13); பெண்களை விடம் என்று உணர்ந்து அவர்கள் பாலுள்ள பற்றினைத் துறத்தல் வேண்டும் (இனியவை 38). பெண்கள் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவர் எவரும் இல்லை (ஏலாதி 20) என நீதிகள் அறிவுறுத்தப் பெறுகின்றன துறவை வலியுறுத்தக் கருதிய நீதி நூல்கள் பெண்கள் மீது வெறுப்பை உமிழ்ந்து பெண் பிறப்பை இழிவுபடுத்துகின்றன பெண்களை உயர்வாகச கூறிய சங்க நூல் கருத்துக்கள் மெல்ல மெல்ல மறைந்து பெண்களை விடம் என்று கூறப்பெறுதலைக் காண்கின்றோம். உலகைப் பற்றைத்துறக்கும் பொருட்டு இளமை, யாக்கை, அழகு நிலையாமைகளைக் கூறும் போது கூடப் பெண்களின் இளமை, யாக்கை, அழகு நிலையானமகளே எடுத்துரைக்கப் பெறுகின்றன (நாலடி 17, 41,. 43, 44, 45, 47). சிலம்பில் கோவலனிடம் கவுந்தியடிகள் அறிவுரைகள் கூறுங்கால் பெண்கள் உலகத்துன்பங்களின் தோற்றம் என்ற கருத்து வெளிப்படுத்தப் பெறுகின்றது. (14 : 35 - 44). சிந்தாமணியில் பெண்கள் ஏழைப் பெண்பிறப்பு(முத்தி : 522)ஏசு பெண் (முத்தி : 523) பொருள் தெரிந்தோர் பெண்ணாகார் (முத்தி : 219). என்றும் அன்பாகிய நாரால் இனிய சொற்களாலகிய மர்களைக் கட்டிக் காதலாகிய சாந்தினால் ஒப்பனை செய்து காமமாகிய மாலையைப் பகற்பொழுதும் சூடி நீங்காமலிருப்பினும் அவருக்கு மற்றோரிடத்து மனப் போகும் (கனக : 40) என்றும் பெண்களுக்கு மன வலிமை இல்லை குடிப்பிறப்புக்குக் கேடு வரும் என்றும் பாரார். ஏனெனில் எண்ணிப் பத்துப் பொருளை கங்கையிலிட்டால் இந்திரன் மகளேயாயினும் அவர் பின்னே மமனத்தைச் செலுத்திவிடுவர் (கனக 41) என்றும் பெண் பிறப்பு இழித்துரைக்கப் பெறுகின்றது. பெண்களிடம் காதல் கொண்டால் நரகம் கிட்டும் (கனக : 77) பெண்ணாசையை விட்டவர்களே துறக்கம் பெறுவர் (முத்தி : 522) எனவும் பெண்வெறுப்பு வெளிப்படுத்தப்படுமாற்றைக் காண முடிகின்றது.

6. கணவனால் கைவிடப்பட்ட நிலை-பாதுகாப்பற்ற நிலை :-

பரத்தை உறவு காரணமாகக் கணவனால் கைவிடப்பட்டு வாழ்விழந்த நிலையிலுள்ள மனைவி மட்டுமன்றி கணவனை இழந்து துணையின்றித் தவிக்கும் கைப்பெண்களும் போற்றுவாரற்ற தாய்மார்களும் வாழ்ந்துள்ளனர் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. சங்க இலக்கியத்தின் மூலம் கணவனை இழந்த பெண்கள் 'ஆளில் பெண்டிர்' என அழைக்கப் பெற்றனர் என்பதும் இவர்கள் நூல் நூற்று வாழ்க்கை நடத்தினர் என்பதும் வெளிப்படுகின்றன (புறம், 25 : 1 - 2 நற் : 353 : 1 - 2) நற்பண்பிலாதார் செயல்களுள் ஒன்றாகக் கற்புடைய மனைவியைத் துறத்தலைத் திரிகடுகமும் (97) குறிக்கின்றது. ஈன்ற தாயைப் பாதுகாவாதிருத்தல் துன்பம் தரதக்க செயலென இன்னா நாற்பது (17) உரைக்கின்றது. கைம் பெண்களைப் பாதுகாத்தல் மிகப் பெரிய அறம் எனச் சிறுபஞ்சமூலமும் அறிவுறுத்துகின்றது (70) மேலும் பெண்களைக் கணவன், உடன்பிறந்தவன், மாமன், தந்தை ஆகியோர் காத்தல் வேண்டும் எனவும் சிறுபஞ்சமூலம் வலியுறுத்துகின்றது (52) எந்தச் சமுதாயத்தில் நீதி, ஒழுக்கம் முதலியவை குறைகின்றதோ அங்குத் தான் நீதிக்கருத்துக்களை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் ஏற்படும். இக் கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது நீதி நூல்கள் காட்டும் சமுதாயத்தில் பெண்டிர் போற்றுவாரற்றுக் கைவிடப்பட்ட நிலையிலும் வாழ்ந்துள்ளனர் என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கேற்ப உதயணன் ஆட்சிப் பொறுப்பேற்றதும் கணவனால் கைவிடப்பட்டு வாழ்விழந்த பெண்களுக்கு உதவம்படி ஆணையிடும் நிகழ்ச்சியைப் பெருங்கதையும் (வத்தவ : 2 30 - 34) சீவகன் முடிசூடியதும் பரத்தையர்பால் கொண்ட வேட்கை காரணமாகக் கணவனால் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கு மனையுடன் இடையாறச் செல்வமும் கொடுக்கப்படும் என முரசறையப்படுமாற்றைச் சிந்தாமணியும் குறிப்பிடுகின்றன.

7 பரத்தையர் இழி நிலை :-

பரத்தையர் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியத்தில் பரக்கக் காணலாம். பரத்தையர் தோற்றம் பெண்ணினத்தின் இழிவைக் காட்டுவதாகவும் பரத்தமை பெண்கள் ஆடவர்களின் இன்பப்பொருள்கள் என்பதற்கு இடும் முத்திரையாகவும் கருதலாம் பரத்தையரிடத்து காண்டுள்ள உறவை ஆடவர்களிடம் காணப்பட்ட கறை எனக்

கொள்ளினும் (கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும். ப. 183) பெண்களைப் பரத்தையர், குடும்பப் பெண்கள் எனப்பாகு படுத்தியது பெண்ணினத்தின் இழிவைக் காட்டுகின்றது என்பதையும் மறுத்தற்கியலாது. செல்வ வளமிக்க ஆடவர்களின் உடற்பசியைத் தீர்ப்பதற்குச் சமுதாயம் ஆக்கிக் கொடுத்த வடிகாலாகவே பரத்-தமையைக் கருதலாம். இலக்கியங்களில் இவர்கள் பல நிலைகளில் இழித்துரைக்கப் பெறுகின்றனர். (புறம் 73, பரி : 20 ; 49 - 58, குறள் வளரவின் மகளிர், திரி : 24, 55, நாலடி. 371, சிந்தா : சுர : 7 : 8) இவர்கள் அடுத்தப் பிறப்பில் விலங்காகப் பிறப்பார் எனச் சிந்தாமணி அச்சுறுத்துகின்றது (முத்தி : 181) பெருங்கதையில் நருமதை உதயணனுடன் உறவு கொள்ள மறுத்த பிறகும் கூட அவளை அடியாற்களால் பற்றி வருமாறு அவன் ஆணையிடுகின்றான். இதனால் பரத்தையரின் சமூக இழிநிலை விளங்குகிறது

சமுதாயத் தாழ்நிலையின் காரணங்கள் :

மருத நில வளர்ச்சி :-

வரலாற்று நோக்கில் பார்க்கும் போது இனக்குழுச் சமுதாய அமைப்பு சிதைவுற்று அடுத்த நாகரிகச் சமுதாய அமைப்பு தோன்று-கின்ற காலநிலையில் தான் மக்களிடையே தரப்பிரிவுகள் தோன்றிய பொதுத் தன்மையை உலக சமுதாயங்கள் அனைத்திலும் காண முடிகின்றது. இச்சூழலில் தான் பெண்களின் நிலையும் ஆடவர் நிலையைவிடத் தாழ்ந்துவிடத் தொடங்கியது எனலாம். நாகரிகச் சமுதாய அமைப்பின் வளர்ச்சிப்பண்ணையாக ஏனைய நிலங்களை விட மருதநிலமே சிறந்து விளங்கியது. இங்கு உழுதொழில் சிறப்-புற்று உற்பத்திப் பொருள்கள் உணவுப் பொருட்கள் - நிரம்பக் கிடைக்கப் பெற்றமையால் இந்நிலமக்களுக்கு உணவின் பொருட்டு அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்படவில்லை. எனவே, ஆற்றங்-கரைகளிலே - நீர்வளமிக்க மருத நிலப் பரப்புகளிலே - நாகரிகச் சமுதாயம் தோற்றம் கொள்ள ஆரம்பித்தது. இங்குதான் நிலவுரிமை-யும் காணப்பட்டது. நிலவுரிமையுடைய - பொருளாதார நிலையில் மேம்பட்ட ஆடவர்கள் பெண்களை விட ஆதிக்கம் மிக்கவர்களாக விளங்கினர். எனவே, இந்நாகரிகம் பெற்ற சமுதாயத்தில் ஆடவர்-களுக்குரிய உரிமைகள் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதன் மூலம் பெண்களை அடிமைகள் போல் அடக்கி வாழும் நிலை மருத

நிலத்தில்தான் தோன்றியது என்பதை ஐயமின்றி உணர முடிகின்றது (ஏங்கெல்ஸ், குடும்பம், தனிச் சொத்துரிமை, அரசு ஆகியவற்றின் தோற்றம், பக்கம் 18-19)

இதற்கு மாறாகப் பிற நிலங்களில் வாழ்ந்த மக்களில் ஆடவரும் பெண்டிரும் சமமாகவே மதிக்கப் பெற்றிருந்தனர். தொல்காப்பியர் முந்நீர் வழக்கம் பெண்களுக்கு இல்லை; பெண்கள் பாசறையில் புகார் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால், பெண்கள் பாசறையில் விளக்கேற்றியமைக்குச் சங்க இலக்கியச் சான்று உள்ளது. எனவே தொல்காப்பியர் சுட்டும் பெண்கள் மருத நிலத்தைச் சார்ந்தவர்களாக் இருக்கலாம் என்பது விளங்குகின்றது. பாணர் வகுப்பினரும் ஆட்வர், பெண்டிர் வேறுபாடின்றிப் பழகினர். முல்லை நிலப் பெண்கள் தயிர் விற்பதற்கும் நெய்தல் நிலப் பெண்கள் உப்பு, மீன் விற்பதற்கும், பிற நிலங்களுக்கும் சென்றுள்ளனர். மருத நிலத்திலும் கூட நிலவுரிமையற்ற ஆடவர், பெண்டிர் இருபாலாரும் இணைந்து வயல் வேலைகளில் ஈடுபட்டுள்ளமை தெரிய வருகின்றது. இவற்றால் நிலவுரிமையை உடைய, உபரி உற்பத்தியைக் கொண்ட நாகரிகச் சமுதாயமாகிய மருத நிலத்தில் ஆடவர், பெண்டிரிடையே சமூக மதிப்பில் தரப்பிரிவுகள் நிலவியிருக்கலாம் என்பது புலப்படுகிறது. சங்க இலக்கியத்தில் இனக்குழு அமைப்பின் எச்சக் கூறுகளும் நாகரிகச் சமுதாய அமைப்பின் தோற்றக் கூறுகளும் காணப்படுமாற்றால் சங்க காலத்திலேயே இவ்வேறுபாடுகள் தோன்றிவிட்டன என்பதை உணரமுடிகின்றது.

தாய்வழி உரிமை அகற்றப்பட்டமை :-

இனக்குழுச் சமுதாய அமைப்பில் தாய்வழி உரிமையே சிறப்புற்றிருந்தது எனச் சமுதாய வரலாற்றறிஞர்கள் கருதுவர். ஆடவர்-பெண்டிரிடையே உழைப்புப் பிரிவினை (Division of labour) காணப்பட்டது. இரு பாலார்க்கும் பொருளாதார நடவடிக்கைகளில் இணையான பங்கு இருந்தது. இவ்வமைப்பில் குடும்பத் தலைவனின் சொத்து அவனுக்குப் பின்னர் அவன் தாய்வழியையே சென்றடைந்தது.

ஆதிக் குடிகளிடம் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது என்றும் இதனால் அவர்களிடையே 'பல ஆடவர்

மண்முறை' சிறப்புற்றிருந்தது என்றும் கருதப் பெறுகின்றது. இம்முறையில் தாய்மை நன்கு மதிக்கப் பெற்றமையால், பெண் வழியாக இரத்த உறவு (Blood - relation) கணக்கிடப்பட்டது. இதுவும் தாய்வழி முறை எனப் போற்றப்பெற்றது.

சமுதாய வளர்ச்சிப் போக்கில் கால்நடை மந்தைகளும் செல்வங்களும் பெருகப் பெருகக் குடும்ப வாழ்க்கையில் மாறுதல்கள் நிகழத் தொடங்கின. வாழ்க்கைக்குரிய பொருள்களை ஈட்டுதல் ஆடவர் கடனாக மாறியது. உற்பத்தித் துறைகளில் ஆடவர் பங்கு மேலோங்கியது. எனவே, உற்பத்திப் பொருட்கள் ஆடவர் உடைமைகளாயின. பெண்கள் அவற்றை நுகர்வதில் மட்டுமே பங்கு பெற்றனர். உரிமையில் பங்கு கொடுக்கப் பெறவில்லை. இதனால் தந்தை வழியுரிமை தோற்றம் கொண்டது

தாய் வழியுரிமை அகற்றப்பட்டமையின் காரணமாக ஆடவர் ஆதிக்கம் உயரவே பெண்கள் ஆடவர்களின் கீழ்ச் சார்ந்து வாழும் நிலை உருவானது. குடும்ப நிர்வாகம் சமுதாய நிர்வாகமாகக் கருதப்பெறாது தனிப்பட்ட தொண்டாகக் கருதும் நிலை ஏற்பட்டு விட்டது. சமூக உற்பத்தியிலிருந்து பெண்கள் வெளியேற்றப்பட்டனர் எனவே, தாய் வழியுரிமை அகற்றப்பட்டமை பெண்ணினம் அடைந்த சமூகத் தோல்வி எனக் கூறலாம். இதனால், பெண்கள் சமூகத் தாழ்நிலை அடையும் நிலை உருவாகிவிட்டதெனக் கொள்ளலாம்.

பொருளாதார வீழ்ச்சி ::-

பெண்களின் தாய்வழியுரிமை அகற்றப்பட்டதால் அவர்கள் பொருளாதார நிலையில் வீழ்ச்சி அடைந்தனர். எந்த ஒரு சமுதாயத்தில் பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வற்ற நிலைக் காணப் பெறுகின்றதோ அந்தச் சமுதாயத்தில்தான் ஆண் பெண்ணிடையே சமத்துவ நிலை காணப்பெறும். எனவே, பெண்களின் பொருளாதார வீழ்ச்சியாலும் சம உரிமையின்றி வாழும் நிலை உருவானதாகக் கருதலாம். இக் கருத்திற்கு அரணாகத் தமிழ் இலக்கியத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தமைக்கான குறிப்புக்கள் எங்கும் காணப்பெறாமையைக் கூறலாம்.

சமயக் கொள்கைகளின் தாக்கம் :

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்தில் சமண பௌத்த மதங்கள் தழைத்தோங்கியதென வரலாறு காட்டுகின்றது. இம்மதங்கள்

துறவை வற்புறுத்துவதில் நாட்டம் கொண்டிருந்தன துறவை மேற்கொள்ளச் செய்வதற்கு ஆடவர்களிடத்துப் பெண்ணினத்தின் மேல் வெறுப்பைக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே தான் பெண்கள் வெறுக்கத்தக்கவர்கள், இழிபிறவியினர். துன்பத் தோற்றங்கள் என்னும் கொள்கைகளைப் பரப்பின இதனடிப்படையில் எழுந்த இலக்கியங்களிலும் இக்கொள்கைகள் வெளிப்படுத்தப்பெற்றன எனத் தோன்றுகின்றது.

இது காறும் கண்டனவற்றால் தமிழ் இலக்கியங்கள் பெண்களை உயர்வாகப் போற்றும் பொது நிலையே காணப்படுகின்றது எனினும் இனக்குழுச் சமுதாய அமைப்பு மாற்றம், நாகரிகச் சமுதாய அமைப்பின் தோற்றம், தாய்வழியுரிமை அகற்றப்படல், ஆடவர் ஆதிக்க நிலை, பெண்களின் பொருளாதார வீழ்ச்சி சமயக் கொள்கைகளின் தாக்கம் என்னும் காரணங்களால் சமூக இன்னல்களுக்கு ஆளாயினமை, அரசியலில் பங்கு பெறுதல். கணவனைத் தேர்ந்தெடுத்தல், ஆண் பெண் சமமாக மதிக்கப்பெறுதல், கணவன் தவறுகளைக் கண்டித்தல் ஆகிய உரிமைகள் இன்மை, பலகட்டுப்பாடுகளுக்குள்ளாயினமை, இழிபிறவியினராகக் கருதப் பெற்றமை, கணவனால் கைவிடப்பட்டமை, பாதுகாப்பின்மை, பரத்தையர் இழிவு என்னும் நிலைகளில் சமுதாயத்தில் தாழ்ந்த சமூக மதிப்பைப் (Low Social States) பெற்றிருக்கின்றனர் எனவும் கருதமுடிகின்றது.

குறுக்க விளக்கம்

இனியவை	—	இனியவை நாற்பது.
உஞ்சை	—	உஞ்சைக் காண்டம்.
கனக	—	கனகமாலை கலம்பகம்.
சிறு	—	சிறுபஞ்சமூலம்.
திரி	—	திரிகடுகம்.
நற்	—	நற்றிணை.
நாலடி	—	நாலடியார்.
பரி	—	பரிபாடல்.
புறம்	—	புறநானூறு
பூமகள்	—	பூமகள் இலம்பகம்.
முத்தி	—	முத்தி இலம்பகம்.
முதுமொழி	—	முதுமொழிக் காஞ்சி.
வத்தவ	—	வத்தவ காண்டம்

சிலப்பதிகாரம், பெரிய எழுத்து கோவலன் கதை, கோவலன் திருப்புகழ் காவடிச் சிந்து ஓர் ஒப்பாய்வு.

- டாக்டர். மு. மாணிக்கம்,
பழனியாண்டவர் கலைக் கல்லூரி,
பழனி

சிலப்பதிகாரம், பெரிய எழுத்து கோவலன் கதை, கோவலன் திருப்புகழ் காவடிச் சிந்து, என்னும் மூன்று நூல்களும் இக் கட்டுரைக்கண் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன. சிலப்பதிகாரம்தான் காலத்தால் முந்தியது. அதிலேகூட அந்நூல் பாடப்பட்ட காலத்திற்கு முன் வழங்கிய கதைதான் கண்ணகி, கோவலன், மாதவி கதை என்று சொல்லத் தக்கவாறு புகார்க் காண்டத்திலும், மதுரைக் காண்டத்திலும், உள்ள வெண்பாக்கள் அமைந்துள்ளன தொன்மை எனும் வனப்பு வகையைச் சார்ந்தது சிலப்பதிகாரம். பழமையான வரலாற்றடிப்படையாக இயற்றப்படும் இலக்கியம் தொன்மை என்னும் வனப்புக்குரியது. சிலப்பதிகாரமும் அவ்வகை இலக்கியம் என்று உரையாசிரியர்கள் கூறுவதால் இளங்கோவடிகள் காலத்திற்கு முன்பே இக்கதை வழங்கி வந்திருத்தல் வேண்டும். இப்பழங்கதையடிப்படையில் பிற்காலத்தில் பற்பல மாற்றங்களுடன் பல கதை நூல்கள் தோன்றின.

சிலப்பதிகாரம் காப்பியச் சிறப்புமிக்க ஓரிலக்கியமாதலால் தம் காலத்திற்கு முன்பு வழங்கி வந்த நாட்டுப்புறக் கதையில் பல மாற்றங்களைச் செய்து உயர்ந்த இலக்கியம் என்னுமாறு இளங்கோ பாடினார். ஆனால் பிற்காலப் பெரிய எழுத்து கோவலன் கதையும் கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்தும் பழைய கதையைப் பின்பற்றியது போலக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்திற்கும் ஏனையை இரண்டு நூல்களுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தாலும், பல வேறுபாடுகளும் உள்ளன. சிலப்பதிகாரத்தின் அளவிறந்த இலக்கியத்

தரமோ, பாத்திரப் படைப்போ, சிறந்திராதவை ஏனைய இரு நூல் களும்.

சிலப்பதிகாரம் கண்ணகி கோவலன் திருமணத்தில் தொடங்குகிறது. கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்தும், கண்ணகி கோவலன் திருமணத்திலேயே தொடங்குகிறது. ஆனால் பெரிய எழுத்து கோவலன் கதையில், கண்ணகி, கோவலன், மாதவி பிறப்புச் சொல்லப்படுகிறது. கண்ணகி காளியின் மறுபிறப்பு என்பதும், மாதவி கோவலனின் முற்பிறப்பில் மனைவி என்பதும் பெரிய எழுத்து கோவலன் கழுத்தில் விழ அதைக் கழற்றித்தர முடியாத நிலையில் ஒப்பந்தப்படி கோவலன் கதையில் சொல்லப்படுகிறது. முற்பிறப்பில் வாணியனாக இருந்த தன் பக்தனைக் கொன்ற பாண்டியரைப் பழி வாங்கவே காளி கண்ணகியாகப் பாண்டியன் மனைவி கோவிலிங்கியின் மகளாகப் பிறந்தாள் என்ற கதை சொல்லப்படுகிறது. இக்கதை சிலம்பிலும், காவடிச் சிந்திலும் இல்லை

மாதவி சோழன் முன்னிலையில் நாட்டியமாடித் தலைக்கோல் பட்டமும், ஆயிரத் தெண்கழஞ்சு பொன்னும் பரிசாகப் பெற்றாள் என்று சிலப்பதிகாரம் சொல்கிறது. ஆனால் மாதவி திருக்கடையூர் வசந்தமாலை எனும் தாசிமகள் என்றும், அவள் கோவலன் கண்ணகி திருமணத்தில் ஆடினாள் என்றும், அப்போது அவள் வீசிய மாலை கோவலன் கழுத்தில் விழ அதைக் கழற்றித்தர முடியாத நிலையில் ஒப்பந்தப்படி கோவலன் மாதவியின் பின்னே சென்றான் என்றும் கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்து கூறுகிறது. பெரிய எழுத்து கோவலன் கதையும் இதையே கூறுகிறது. ஆனால் சிலம்போ சோழ அரசன் மாதவிக்குக் கொடுத்த பச்சை மாலையை வாங்கி மாதவியை அடைந்தான் என்கிறது.

சிலப்பதிகாரத்திலும் காவடிச் சிந்திலும் மாதவி என்று பெயர் பெற்றவள் பெரிய எழுத்து கோவலன் கதையில் மாதகி என்று கூறப்படுகிறாள் சிலப்பதிகாரத்தில் மாதவியின் தாய் பெயர் இல்லை. ஆனால் ஏனைய இரு நூல்களிலும் தாய் பெயர் வசந்தமாலை என்றும் அவள் திருக்கடையூர் தாசி என்றும் கூறப்பட்டுள்ளது. வசந்தமாலை என்பவள் சிலம்பில் மாதவியின் தோழியாவாள்

சிலம்பில் வரும் மாதவி ஆடல், பாடல், அழகு மூன்றிலும் சிறந்து நிற்பதோடு பண்பிலும் உயர்ந்து காணப்படுகிறாள். அவள்

பொருளுக்காகக் கோவலனைத் துன்புறுத்தியதாக இல்லை ஆனால் மற்ற இரு நூல்களிலும் அவள் காசுக்காகக் கோவலனைத் துன்புறுத்துவது கூறப்படுகிறது.

சிலம்பில் திருமணமாகும் போது கண்ணகி பன்னிரண்டு வயது மங்கையாக இருக்கிறாள் கோவலன் தீராக் காதலில் உலவாக் கட்டுரை பல பாராட்டுகிறான் - இருவருக்கும் இல்லறம் சிலவாண்டுகள் சிறப்பாக நடக்கிறது. ஆனால் கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்திலும், பெரிய எழுத்து கோவலன் கதையிலும் திருமணம் ஆகும் போது கண்ணகி ஒன்றுமறியாச் சிறுமியாகவும் பல ஆண்டுகள் கழித்தே தனக்குத் திருமணமானதை அவள் பிறரால் தெரிந்தாள் என்றும் கூறப்படுகிறது. குழந்தைத் திருமணம் பிற்கால நூல்களில் கூறப்பட்டுள்ளது.

தனக்குப் பருவம் வந்தபோது. தன் கழுத்தில் தாலி இருப்பதைப் பார்த்து அதைக் கட்டியவன் கோவலன் என்றும், அவன் திருக்கடையூர் தாசி மாதவியிடம் தங்கியுள்ளான் என்றும் அறிந்து கண்ணகி அவனுக்கு முடங்கல் எழுதுகிறாள் என்று காவடிச் சிந்திலும் பெரிய எழுத்து கோவலன் கதையிலும் கூறப்படுகிறது கண்ணகி எழுதும் கடிதம் காதற் கடிதம் அன்று. தாலி சாகக் கிடப்பதாகக் கண்ணகி கோவலனுக்கு எழுதுகிறாள் அப் முடங்கல் பார்த்த கோவலன் மாதவியிடம் கண்ணகியைப் போய்ப் பார்க்க விடை தருமாறு வேண்டுகிறான் அவள் முதலில் மறுத்தாலும், "ஆடை அணிகளோடு அரைஞாணும் கழற்றி வைத்துவிட்டு பத்துலட்சம் பொன் தரின் நீ போகத் தடையிலை" என்கிறாள். கோவலனும் ஆடை, அணிகள், அரைஞாண் எல்லாவற்றையும் கழற்றித் தந்து. பத்து இலட்சம் பொன் தராமல் கண்ணகி வீட்டில் உண்பதில்லை என்று சொல்லி விடைபெற்றுக் கண்ணகி வீட்டிற்கு போகிறான். இது சிலப்பதிகாரத்தில் இல்லை. மாதவியிடம் ஊடல் கொண்டு தான் கோவலன் கண்ணகியிடம் திரும்பி வருகிறான் என்று இளங்கோ கூறுகிறார். சிலம்பில் மாதவி கோவலனைப் பார்த்துப் பொருள் கொடுத்துப் போ என்று கூறியதாக இல்லை.

பெரிய எழுத்த கோவலன் கதையில் கோவலனைப் பதுமை செய்து கொடுத்துப் போ என்று மாதவி சொல்ல கோவலன் தன்னைப் போலவே பொன்னால் பதுமை செய்து கொடுத்து விடை கேட்க

அதைப் பேசவைத்தால் போகலாம் என்கிறாள் அதைக் கோவலன் பேச வைத்துப் போன்தாகப் பாடப்படுகிறது.

கண்ணகி உணவு படைக்கும் போது உண்ண எழுந்த கோவலன் மாதவியின் கடனைத் தீர்க்காது கண்ணகி மனையில் உண்பதில்லை என்று மாதவிக்குச் சொல்லி வந்ததாகக் கூறி உணவு உண்ணாது மாதவியின் கடனைத் தீர்க்கக் கண்ணகியின் சிலம்பைக் கேட்க கண்ணகி அச் சிலம்புகள் தான் பிறக்கும்போதே பிறந்தவை என்றும் அவற்றைக் கழற்ற முடியாதே என்றும், வருந்துகிறாள். பிறகு எப்படியோ கழற்றித்தர அவன் அதை விற்க மதுரைக்குப் புறப்படுகிறான். அவன் மறுத்தும் கண்ணகி கேளாமல் உடன் புறப்பட்டாள் என்கிறது காவடிச்சிந்து. ஆனால் சிலம்பைக் கோவலன் கேளாமலேயே கண்ணகி "சிலம்புள கொண்ம்" என்று கழற்றிக் கொடுத்தாள் என்றும், அவனாகவே கண்ணகியை அழைக்க அவள் மறுப்புச் சொல்லாமல் புறப்பட்டாள் என்றும் சிலம்பில் கூறப்படுகிறது. மதுரைக்குப் போவது சிலம்பை விற்று மாதவி கடனை அடைக்க அன்று. இழந்த பொருளை ஈட்டுவதற்காகவே என்று சிலம்பு கூறுகிறது.

பெரிய எழுத்து கோவலன் கதையில் கண்ணகி கோவலனைச் மதுரைக்குப் போகாமல் குற்றாலம், கும்பகோணம், மாயூரம் போய் சிலம்பை விற்று வாரும் என்கிறாள். ஏனென்றால் மதுரைக்குச் சென்றால் கோவலன் செத்து மடிந்திடுவான் என்று சிலம்பு தன்னைக் கழற்றும் போது சொல்வதாகப் பாடுகிறாள்.

கண்ணகிக்கு வழித்துணையாக மதுரை வரை வரும் கவுந்தியடிகள் கண்ணகியின் கற்புச் சிறப்பை எடுத்து மொழிவதும் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் தருவதும் சிலம்பில் சொல்லப்படுகிறது. ஏனைய இரு நூல்களிலும் கவுந்தியடிகள் இல்லை.

கோவலன் காட்டுவழி போகும் போது கண்ணகி செயலால் மாதவி போல் சிலை நிற்ப கோவலன் அதை உண்மையான மாதவி என்று நினைந்து முத்தமிடப் போகும்போது கல்லென்றுணர்வதாகக் காவடிச் சிந்தும், பெரிய எழுத்து கோவலன் கதையும் கூறுகின்றன. ஆனால் கோவலன் சிலம்பில் இது இல்லை. வனதெய்வம் மாதவியின் தோழி வசந்தமாலை வடிவில் வந்து கோவலனை மயக்க முனைந்தது என்று தான் சிலம்பு கூறுகிறது.

கோவலன் மதுரையில் இடைச்சியிடம் தன் வரலாறு கூறு-கிறான். அப்போது மாதவி எனும் தாசியை வைப்பாட்டியாகக் கொண்டதால் தன் செல்வமெல்லாம் தொலைந்தது என்றும், அவளுக்-குத் தான்பட்ட கடனாகிய பத்து நூறாயிரம் பொன்னை அடைக்கவே கண்ணகியின் சிலம்பை விற்க வந்ததாகவும் கோவலன் திருப்புகழ் காவடிச் சிந்து கூறுகிறது. சலம்புணர்க் கொள்கைச் சலதியோடு ஆடியதால்தான் தன் குன்றனயை செல்வம் தொலைந்தது என்றும் அதனால் ஏற்பட்ட வறுமையே தனக்கு நாணம் தருகிறது என்றும் கோவலன் கண்ணகியிடம் கூறுவதாக இளங்கோ பாடுகிறார்.

சிலம்பில் மாதரி என்று பெயர் பெறும் ஆய்ச்சி காவடிச் சிந்திலும், பெரிய எழுத்துக் கோவலன் கதையிலும் பெயர் இல்லா-மல் ஆச்சி என்றும் இடைச்சி என்றும் மட்டுமே சுட்டப்படுகிறாள். சிலம்பில் வரும் அவள் மகள் ஐயை ஏனைய இருநூல்களிலும் இல்லை

மதுரை வரும் வழியில் கோவலன் தண்ணீர் கொண்டுவரப் போக தனியே இருந்த கண்ணகியிடம் வந்து அணிகலன்யெல்லாம் கழற்றித் தரச் சொல்கின்றனர். கண்ணகி எல்லாவற்றையும் கழற்றித் தருகிறாள். தாலியையும் கழற்றித் தரவேண்டும் என்று கள்வர் கேட்கும் போது கண்ணகி சினங் கொண்டு அவர்களை கல்லாகவும் வெள்வாலாகவும் சபித்து விடுகிறாள் இது பெரிய எழுத்து கோவலன் கதையிலும் வருகிறது இச்செய்தி ஏனைய இருநூல்களிலும் இல்லை.

சிலம்பில் பொற்கொல்லன் பெயர் இல்லை ஆனால் ஏனைய இரு நூல்களிலும் அவன் பெயர் வஞ்சிப்பத்தன் என்று கூறப்-பட்டுள்ளது கோவலன் அரண்மனைச் சிலம்பைத் திருடிய கள்வன் என்று வஞ்சிப்பத்தன் குற்றம் சாட்டி அரண்மனைக்குக் கொண்டு வருகிறான். அங்கு அவனைப் பலவாறு துன்புறுத்துகின்றனர். அப்போது கோவலன் கண்ணகியை நினைத்துப் புலம்புகிறான். தன்னைக் காக்குமாறு கண்ணகியை வேண்டுகிறான். இது விரகாலூர் சுப்பையாபிள்ளை (காவடிச் சிந்து) கூறுவது. புகழேந்தியும் இதே செய்தியை மிக விரிவாகக் கூறுகின்றார். சிந்தாமணி தாசியும், கோவிலிங்கியும், வேதப்பள்ளி ஆசிரியரும் கோவலனுக்கு உதவிட முன்வருவதும் அதை அவன் ஏற்காது கடைசியில் வஞ்சிப்பத்தன் வீட்டிற்குச் செல்ல அங்கு கள்வன் என்று சொல்லிக் கட்டப்பட்டு அரண்மனைக்குக் கொண்டு வருவதும் கூறுகிறார். அங்கு கோவலன் கள்வன் என்று முடிவு செய்து காளி கோயிலில் பலியிடுங்கள் என்று

அரசர் தீர்ப்புக் கூற அமைச்சர்கள் அத்தீர்ப்புச் சரியில்லை என்கிறார்கள். அப்படியானால் "நீங்களே விசாரித்துத் தீர்ப்புக் கூறுங்கள்" என்று அமைச்சரிடமே வழக்கு விடப்படுகிறது. அவர்கள் விசாரித்துக் கோவலன் கள்வன் அல்லன் என்று முடிவு சொல்கின்றனர். ஆனால் பொற்கொல்லன் கோவலன் சத்தியம் செய்ய வேண்டும் என்று கூற அரசனும் அதை ஆமோதிக்கின்றான். கோவலன் ஐந்து சத்தியம் செய்கிறான். கோவலன் எல்லாவற்றிலும் கண்ணகியை நினைத்து வேண்ட உயிர்பிழைத்துக் கொள்கிறான் : இச்செய்தி பெரிய எழுத்து கோவலன் கதையில் வருகிறது. ஆனால் ஏனைய இரு நூல்களிலும் இல்லை.

கோவலன் சிலம்பு விற்கப் புறப்படும் போது சில அடையாளங்களைச் சொல்லிச் செல்கிறான். அவன் இறந்தால் அவை தம் இயல்பில் மாறி தான் இறந்ததைக் காட்டும்; இறக்கவில்லை என்றால் அப்படியே இருக்கும் என்கிறான் அவன் கொலையுண்டவுடன் அந்த அடையாளப் பொருள்கள் தம் இயல்பில் மாற்றம் அடைகின்றன. அது கண்டு கோவலன் இறந்த செய்தியைக் கண்ணகி அறிகிறாள். இச்செய்தி சிலம்பைத் தவிர ஏனைய இரு நூல்களிலும் சொல்லப்படுகிறது. சிலம்பில் கோவலன் இறந்த செய்தியை மதுரைக்குள் சென்ற இடைக்குல மடந்தை அறிந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

கோவலன் கொலையுண்டு கிடக்கும் இடத்தைக் கண்ணகி அடைந்து அவனைக் கட்டியணைத்து அழும்போது அவன் உயிர் பெற்று " இங்கு இருப்பாயாக " என்று சொல்லி மீண்டும் உயிர் நீங்கி விடுகிறான். கண்ணகி தான் கண்ட தீக்கனவை நினைத்துப் பார்த்து பாண்டியன் அரண்மனை வாயிலை அடைகிறாள். இது சிலப்பு கூறுப் செய்தி. ஆனால் காவடிச் சிந்தில் கோவலன் " வந்திருப்பது மாதவியா ? கண்ணகியா ? மாதவியானால் வா! கண்ணகியானால் போ" என்கிறான். அது கேட்ட கண்ணகி "மாலையிட்ட கண்ணகி வந்துள்ளேன் மாதவி ஏன் வருவாள்" என்கிறாள். பெரிய எழுத்து கோவலன் கதையிலும் இதே போல கோவலன் கண்ணகி உரையாடல் உள்ளது.

பாண்டியன் முன்னிலையில் சென்ற கண்ணகி "பழி கொடடா" என்று கேட்கிறாள். "மாலையிட்ட மணாளனைக் கொலைபுரிந்தத்து என்ன நியாயம்?" என்று கேட்கிறாள் "அழிக்கிறேன் உன்னை

ஒழிக்கிறேன்'' என்கிறாள். இது காவடிச் சிந்து கூறுவது. ஆனால் சிலம்பில் கண்ணகி பாண்டியன் முன்னிலையில் வழக்குரைத்து வெற்றி பெறுகிறாள் பாண்டியன் தன் தவறுணர்ந்து தானே உயிர்விடுகிறான். பாண்டிமாதேவியும் அரசனைப் பின் தொடர்கிறாள். பெரிய எழுத்து கோவலன் கதையில் கண்ணகி பாண்டியர் அவைக்குச் சென்று பழிகொடடா என்று கேட்கிறாள். ''கோவலன் செய்த குற்றம் என்ன? கொலை களவு செய்தாரா? சுவரேறிக் குதித்தாரா?'' என்று கேட்க. பாண்டியர் ''காற்சிலம்புத் திருடனைக் கட்டி வைத்தோம் எஞ்-சிலம்பை வரவழைத்தால் திருடன் பழி தாறோம்'' என்கின்றனர் கண்ணகி அழைக்க கண்ணகியின் சிலம்பு பாண்டியனின் பெட்டிக்-குள்ளிலிருந்து வருகிறது. அதைக் கண்ட பாண்டியர் ''எங்கள் சிலம்பை யும் வரவழைத்தால் நீ கேட்ட பழி தாறோம்'' என்கின்றனர். கருடனை அழைத்த அது பாண்டிமாதேவி சிலம்பைக் கொண்டு வந்து தருகிறது பாண்டியர் தம் தவறுணர்கின்றனர். அவர்களைக் கண்ணகி காளி உருவம் எடுத்துக் குத்திக் கொன்று குடலைப் பிடுங்கி மாலை-யாகப் போட்டுக் கொள்கிறாள். இது பெரிய எழுத்து கோவலன் கதை சொல்லும் செய்தி. இது சிலம்பிலோ காவடிச் சிந்திலோ இல்லை.

காவடிச் சிந்தில் கருடன் பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் கொண்டு வருவதும், கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்குவதும். ஊர்மக்கள் பாண்டியன் பழிக்கு நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லித் தம்மைக் காக்குமாறு வேண்டுவதும் சொல்லப்படுகிறது. அதோடு கதை முடிகிறது. பெரிய எழுத்து கோவலன் கதையில் கண்ணகி பாண்டியரை அழித்ததோடு பொற்கொல்லன் வஞ்சிப்பத்-தனை கொல்வதும், அரசமாதேவி கோவிலிங்கியைக் கொல்வதும். நல்லவர்களை மதுரையை விட்டுப் போமாறு சொல்வதும் கூறப்படு-கிறது. இடைச்சி தெரு வேகாது என்று கண்ணகி சொல்ல தீ இடைச்சித் தெருவைச் சுடுவதில்லை. மாதவிக்கு முடங்கல் எழுதி வர வழைத்து அவள் விருப்பப்படி கண்ணகி தீ மூட்ட கோவலனுடன் மாதவி சாகிறாள். இருவருடைய அஸ்தியையும் கண்ணகி கங்கை நதியில் கரைக்கிறாள். பின்பு திரும்பி வந்து திருவொற்றியூரில் வட்ட-புரியம்மன் என்ற பெயரில் நிலைபெறுகிறாள். ஆண்டுக்கொரு அழகிய கம்மாளனைக் கண்ணகிக்குப் பலியிட்டு வருகின்றனர். அக்கம்மாள சாதியில் தோன்றிய புலவன் கண்ணகி மீது பதிகம்பாட மனமிரங்கி கம்மாளனைப் பலியிடுவதை நிறுத்தி எருமைக்கடா பலி கொடுத்தாலே போதும் என்கிறாள் கண்ணகி. இதெல்லாம் சிலம்பிலும் இல்லை; காவடிச் சிந்திலும் இல்லை.

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும், அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்: உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்னும் மூன்று உண்மைகளை விளக்குவது சிலம்பு என்று சிலப்பதிகாரப் பதிகத்தால் தெரிகிறது. அதுபோல ஏதேனும் உண்மையை வலியுறுத்த காவடிச் சிந்தோ, பெரிய எழுத்து கோவலன் கதையோ தோன்றியதாகக் கூறப்படவில்லை இலக்கு ஏதும் வைத்துக் கொள்ளாது பழங்கதையைக் கூறுவது மட்டுமே நோக்கமாகக் கொண்டு காவடிச் சிந்தும், கோவலன் கதை நூலும் தோன்றியிருக்க வேண்டும். என்று கூறலாம். நம்ப முடியாத அற்புத நிகழ்ச்சிகள் மூன்று நூல்களிலும் வரக் காண்கிறோம்.

கதையமைப்பில் மூன்று நூல்களுக்கிடையே பல வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் இருப்பினும் சிலப்பதிகாரம் போன்ற ஏனைய இரு நூல்களும் காப்பியத் தகுதி பெற்றவையல்ல. அதனால் சிலம்பில் வரும் கண்ணகி, கோவலன் மாதவி ஆகிய மூவர்தம் பாத்திரப் படைப்பு சிறந்து விளங்குவது போன்று மற்ற இரு நூல்களிலும் சிறப்புறவில்லை.

கண்ணகியிடம் தெய்வசக்தி இருந்தது என்பதை மூன்று நூல்களும் ஏற்றுக் கொள்கின்றன. காளியே கண்ணகி என்று காவடிச் சிந்தும் கோவலன் கதை நூலும் கூறுகின்றன. சிலம்பு அவ்வாறு கண்ணகியைக் காளியாகக் கூறாவிட்டாலும் கடவுளரும் ஏவல் கேட்கும் அளவிற்கு உயர்ந்த ஒருத்தியாகக் கூறுகிறது. வரம் தரும் அளவிற்குக் கண்ணகி தெய்வமாகத் தோன்றுகிறாள் கண்ணகியிடம் இருந்ததைவிட மாதவிடம்தான் கோவலனுக்கு ஆசை மிகுதி என்பதை மூன்று நூலும் உணர்த்துகின்றன.

சிலம்பிலிருந்து பெரிய எழுத்து கோவலன் கதையும் கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்தும் பெரிதும் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் புகழேந்தியும், விரகாலூர் சுப்பையாபிள்ளையும் சிலப்பதிகாரத்தைப் படித்தறிந்தவராக இருக்கமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. படித்திருப்பார்களானால் சிலப்பிலிருந்து இவ்வளவு வேறுபாட்டுடன் இருவரும் எழுதியிருக்க மாட்டார்கள் எனவே இருவரும் பரம்பரையாகப் பாமரர்களிடையே வழங்கி வந்த கண்ணகி கோவலன் மாதவி கதையையே அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கலாம் சிலம்பில் வஞ்சிக் காண்டத்தில் வரும் செங்குட்டுவன், வடநாட்டுப் படையெடுப்பு. கண்ணகி கோட்டம் அமைத்தல், திருவிழாவில் கண்ணகி வரம் தருதல் என்ற செய்தி ஏனைய இரு நூல்களிலும் இல்லை.

சிலப்பதிகாரத்தைத் தவிர மற்ற நூல்கள் அனைத்திலும் மதுரையில் கோவலனும் கண்ணகியும் இறப்பதோடு கதை முடிகிறது. அதுதான் இயற்கையான கதையமைப்பாகப்படுகிறது. எனவே தான் வஞ்சிக்காண்டத்தை இளங்கோவடிகள் எழுதவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

பத்தினித் தெய்வவணக்கம் சிலப்பதிகாரத்தில் பேசப்படுவது போல ஏனைய இரு நூல்களிலும் கூறப்படவில்லை. மாதவி பொருளுக்கு ஆசைப்படும் வேசி என்பது காவடிச் சிந்திலும் கோவலன் கதை நூலிலும் கூறப்படுகிறது. சிலம்பில் கோவலன் மாதவியை விட்டுப் பிரியும் போது ''மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்'' கூறிபிரிகிறான். மாதவியைக் குடும்பப் பெண்ணாக கோவலன் மதிக்கவில்லை. மாதவியின் இரண்டாம் முடங்கலைப் படித்த பின்னர் அவளின் பண்புயர்வைக் கோவலன் உணர்ந்தாலும் அவள் வேசி குலத்தில் பிறந்த வேசி என்ற எண்ணம் கோவலனுக்கு மாறவில்லை. எனவே மூன்று நூல்களிலுமே இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது.

கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்து நூல் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழரிடையே வழங்கி வரும் கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோர் பற்றிய பழங்கதையை அடிப்படையாகக் கொண்டதால் அப்பழங்கதையையே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சிலப்பதிகாரம், பெரிய எழுத்து கோவலன் கதை, கோவலன் திருப்புகழ்க் காவடிச் சிந்து ஆகிய மூன்றும் ஈண்டு ஒப்பாய்வு செய்யப் பெற்றன.

சாது சுவாமிகள் கும்பாபிஷேக விழா

திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள ரமணபகவான் மீது பாக்கள் இயற்றியும், ரமணோபதேசங்களை தெளிவுற விளக்கியும் நெடுங்காலம் வாழ்ந்த சாது ஓம் சுவாமிகளின் ஞானாலயக் கும்பாபிஷேக விழா 7-12-87 திங்கட்கிழமையன்று ரமண நகரில் சிறப்புற நடந்தேறியது. அது போழ்து ரமணோபதேச நூன்மாலை, ரமணவருகை எனும் இரண்டு நூல்களும் வெளியிடப் பட்டன. நூல்கள் வேண்டுவோர் அருணாசல ரமண நிலையம், மணக்குள விநாயகர் தெரு, மணநகர் திருவண்ணாமலை - 3 எனும் முகவரிக்கு முறையே 28-ரூ, 6-ரூ. அனுப்பப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்டனிடம் காணப்படும் கடவுட்பற்று

— திரையன்

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லண்டன் மாநகரத்தில் பிறந்த ஜான்மில்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உருவாக்கிய ஒரு மாணவமணி தாய்மொழியாம் ஆங்கிலத்தில் கரை கடந்த கல்விகற்று கிரேக்கம், இத்தாலியம், லத்தீன் போன்ற பன்மொழி இலக்கியங்களை ஆழ்ந்து பயின்று நுழைபுலம் எய்தியவன் மில்டன். கடுமையான உழைப்பின் மூலம் சொற்செட்டும் மிடுக்கான நடையும் நிறைந்த ஆங்கிலக் கவிதை உலகினைக் கட்டியாண்ட இணையற்ற கவிஞன். கிறித்தவ மறைநூலான விவிலியத்தைத் தழுவி ஆன்மீகம் சார்ந்த பூங்காவனப் பிரளயத்தை பன்னீராயிரம் வரிகளிலே தந்த காப்பியக்கவிஞன். அரசியல். இலக்கியம், சமூகம் ஆகியவற்றைச்சார்ந்த அவனது சிந்தனைகள் ஆங்கில, இலத்தீன் மொழிகளிலும் அவன் எழுதிய பாடல்களிலும் காணக் கிடைக்கின்றன.

பாரகாவியமெல்லாம் ஒரிரு தினத்திலே பகரக்கொடி கட்டினேன் என்றான் கவிகாளமேகம் அலட்சியமும், செருக்குமில்லாமல் அந்த கவிதைக் கடவுளை எளிமையோடும் பணிவோடும் வணக்கம் செய்கிறான் மில்டன்.

எனது அறியாமை இருளை ஒளிபெறச் செய்
அடிமட்டத்தில் வதிக்கின்ற என்னை கைதூக்கி உயர்த்திவிடு
காலந்தோறும் அழியாது இந்தப்பிரபஞ்சத்தைக் காப்பாற்றும்
கடவுளரின் செயல்கள் மனிதகுல உயர்வுக்கே
என்று நான் கவிமழை பொழிய வேண்டும்-

இறைமைக்குப் பணிகின்ற மில்டனின் எளிமையும் பணிவும் இங்கு தெளிவாகிறது. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து' என்ற குறளை

நினைவு படுத்துகிறான் மில்டன்.

கண்ணொளி மங்கிய காலத்தில் காவியம் பாடியவன் மில்டன். நாற்பத்திஐந்து வயதிலேயே பார்வையற்றுப் போனதற்குரிய பல காரணங்களுள் கடுமையாகப் படித்தமையும் ஒன்று என்று சொல்லப்படுகிறது. மெழுகுவர்த்தியின் மங்கிய ஒளியில் 12 முதல் 45 ஆம் வயது வரை ஏறத்தாழ 33 ஆண்டுகள் அன்றாடம் இரவு ஒரு மணிவரையில் யாதானும் ஒரு நூலைப்படிக்காமல் மில்டன் படுக்கைக்குச் சென்றதில்லை. எனவே தான் நூலைப்பற்றிச் சொல்லும் போது - நூல்கள் என்பவை மடிந்து போன கைச்சாத்துகள் அல்ல. நூலைப் படைத்தவருக்கு எந்த ஆற்றலும் அறிவும் இருந்ததோ, அந்த அறிவின் ஆழத்தை சுமந்து நிற்கும் அமுதசுரபிகள் என்றான். தலைசிறந்த அறிஞனின் உயிரோட்டமான கருத்துகளே அவன் படைத்த நூல் என்பதூஉம் மில்டனின் கருத்தாகும்.

செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும், தெரிந்தவற்றைப் பேசுதற்கும் மனச்சான்றின்படி அவற்றை விவாதிப்பதற்கும், ஒட்டு மொத்தமான கருத்துகளை உரிமம் இல்லாமல் அச்சிடுதற்கும் மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று போரிட்டான் மில்டன். முடியாட்சியைத் தொலைத்துத் தன்னாட்சி கொண்டு வந்த ஆலிவர் கிராம்வெல்லின் அரவணைப்பில் இங்கிலாந்து இருந்தகாலம் அது.

ஆங்கிலக்காப்பியமாகிய சுவர்க்க நீக்கத்தில் வருகின்ற சாத்தான் மில்டனின் அற்புதமான படைப்பு. கடவுளின் திருக்குமாரனால் சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டுத் தோல்வியுற்றபோதும் துவளாதவன். கம்பன் படைத்த இராமகாதையில் வருகின்ற இராவணனும் தாரணி மௌலிபத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தில் போட்டு வெறுங்கையோடு லங்கை புக்கபோதும் மனம் தளராது போரிட்டவன். தங்களது வீழ்ச்சியிலும் மாட்சியினைக் காட்டுகின்ற இந்த இரண்டு கதாபாத்திரங்களின் படைப்பில் கம்பனும் மில்டனும் கைகோத்து நிற்பதைக் காணுகிறோம்.

சுவர்க்க நீக்கத்தில் மீண்டும் ஒரு காட்சி. ஆதாமும் ஏவாளும் பூங்காவனத்தில் தன்னிச்சையாக உலவுகின்றனர். பெண்களுக்கே உரித்தான பிடிவாதம் ஏவாளை விட்டுவிடுமா? தனியே சென்று பணிபுரிவேன் என்று தர்க்கம் செய்கிறாள். கணவன் அருகிருந்தால் உதவியும், பாதுகாப்பும் உனக்கு உறுதி என்கிறான் ஆதாம். இந்த நயவுரை ஏவாளின் செவியில் ஏறவில்லை. விளைவு சாத்தானின்

வயப்படுகிறாள். பிழைசெய்த ஏவாளோடு ஆதாமும் சேர்ந்து இறைவன் விதித்த தண்டனையை இருவருமே ஏற்றுக்கொள்கின்றனர். இந்தக்கட்டத்தில் வருகின்ற மில்டனின் கருத்துகள் பலர் நினைப்பது போன்று பெண்ணுரிமையைத் தடுப்பன அல்ல. பெண்மையின் உயர்வை மதித்துப் பாதுகாக்கும் உயரிய கொள்கைகள் என்றே கொள்ளல் வேண்டும்.

சாக்காட்டைப் போன்ற உறக்கம் இறவாத பெருவாழ்வுக்கு என்னை இட்டுச்செல்கின்றது என்று சுவர்க்க நீக்கம் 12 - ஆம் புத்தகத்தில் வருகின்ற மில்டனின் கருத்து உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்னும் வள்ளுவரின் குறளோடு ஒத்துப்போகின்றது மில்டன் வாழ்ந்த காலத்தும், இறந்துபோன பின்னரும், அவனை யொத்த பிறகவிஞர்கள் அவனுக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளனர். பிரிவினைச்சக்தியில் ஆழ்ந்து கிடக்கும் ஆங்கில நாட்டைக் கரையேற்றித் தூய்மைப்படுத்த நீ மீண்டும் பிறக்க வேண்டும் என்றான் வேர்ட்ஸ்வொர்த். யானறிந்த கவிஞருள் ஒரு தலைசிறந்த இளவரசன் மில்டனே என்றான் பைரன். மில்டன் ஆங்கிலநாட்டுக்கு இறைவன் ஈந்த இலக்கியக்குயில் என்றான் டென்னிசன் ஈடும் ஏடுப்பும் அற்ற இந்தக் காப்பியக்கவிஞன் சிந்தனைகள் நாம் ஓதி உணர்ந்து போற்றத் தக்கவையாகும் இப்பூவுலகில் படைக்கப்பட்ட உயிரினங்களுள் மானுடப் பிறவியே ஆறறிவு படைத்தது. அந்த ஆறாம் அறிவே பகுத்தறிவு. தீயது எது நல்லது எது என்று பகுத்து அறியும் தன்மை இருப்பதனாலே அந்த நுண்ணறிவையே பகுத்தறிவு என்கிறோம்.

> மக்கள் தாமே ஆறறிவுயிரே பிறவும் உளவே
> அக்கிளைப் பிறப்பே.

மக்களெனப்படுவோர் ஐம்பொறி உணர்வேயன்றி மனம் என்பதோர் அறிவும் உடையர். இந்தப் பகுத்தறிவு ஒன்றே மக்களை மாக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது. பகுத்தறிவுடையோர் மக்கள் என்பது ஒரு பொது நியதி. நடைமுறை உலகத்தில் நாம் காணும் மனிதருள் அனைவருமே பகுத்தறிவினரா? தீவினை நல்வினைகளைப் பகுத்தறிந்து பின் அவற்றுள் முன்னதை அகற்றி நல்வினையைப் பின்பற்றுகிறார்களா? இல்லையே! உள்ளத்தாலும்

செயலாலும், சொல்லாலும் தீயவற்றை எண்ணாத, செய்யாத, சொல்லாத மனிதன் எங்காவது இருக்கின்றானா? ஆயின் இந்த உலகம் போர்ப்பயம் நீங்கி, வறுமை தவிர்த்து வளமாக வாழ்ந்திருக்குமே! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் மலிந்து காணப்படுகிறர்களே! செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடாத நடுவுநிலை நன்னெஞ்சினோர் இந்த உலகத்தில் எத்துணைப்பேர் உள்ளனர்? மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத் தம்புகழ் நிறுவித் தாம் மாய்ந்தவர் எத்துணை பேர்? லட்சத்தில் ஒருவர் இருக்கக் கூடும் அத்தகையோரையே நாம் மகாத்மாக்கள் என்று போற்றுகிறோம். லட்சத்துள் ஒருவரே மகாத்மா எனின் மற்றையோரெல்லாம் ஆத்மாக்கள் தான் ஆயின் நாம் அனைவருமே ஒருமனதாக விழைந்து போற்றத்தகும் மனிதன் யாராக இருக்க முடியும்? அவனது இலக்கணங்கள் யாவை? இந்த வினாக்களுக்கெல்லாம் ஆங்கிலக் கவிஞன் மில்டன் பதிலிறுக்கிறான். கயவர் தம் உறவினைக் கடிந்துவிடு. மனதறிந்து கொடுமை செய்வாரோடு கறந்து பழகாதே சினமும் ஆத்திரமும் கொண்டாரை ஒதுக்கி விடு. கயவரைக் கடிதலும், கொடுமையை விலக்கலும், சினத்தைத் தவிர்த்தலும் ஒரு மனிதனை நல்லவனாக்கி விடும். உண்மைதான் ஆயினும் சுற்றிலும் தீமைகள் நிகழும்போது அந்த நல்ல மனிதன் வாய்மூடியிருந்தால் பொருத்தமோ! கடிதில் சென்று கொடுமைகளைக் களைய வேண்டாவோ! ஒதுங்கியிருப்பது உயர்ந்த குணம் என்று சொல்ல முடியுமா என்று கேட்டால், மில்டனின் பதில் இதுதான் நெல்லோடு சேர்ந்த பசுங்காயும், பதரும் நெல்லாகத்தான் தோன்றும் விரைந்து வீசும் காற்றுப் பட்டவுடன் பதரும் பசுங்காயும் பறந்து போக முற்றி விளைந்த நெல் மட்டுமே மஞ்சள் நிறமாக ஒளி விடுகிறது அது போல நெடுஞ்சறிந்த கொடுமை செய்வோரும் நேர்மை அற்றோரும், சீர்மை குலைப்போரும் மனித உருவத்தில் இருப்பது உண்மைதான் காலமெனும் கடுங்காற்று வீசும்போது இந்தக்கறை படிந்தவர்கள் மறைந்து விடுவர். நல்லவர்கள் நிலைத்து நிற்பர் ஊனுடம்பால் அழிந்தாலும் புகழுடம்பால் நிலைத்து நிற்பர் திருமூலர் சொல்வது போன்று உடம்பால் அழிவர். மற்றைப் புகழினால் உயிர் வாழ்வோர்.

மில்டன் இறைவன் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டவர் தன் நெஞ்சறிவது பொய்யறிக என்னும் வள்ளுவ நீதியைத் தெரிந்தோ தெரியாமலோ இந்த வையகம் பின்பற்றிக் கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர். கடவுள் நம்பிக்கையின் மீது கண்டனக் கணைகள் வீசப் படாத காலம். எனவே தான் இறைவன் மீது ஆழ்ந்த பற்றும்

பாசமும் கொண்ட அந்த ஆங்கில இலக்கிய மேதை தனது எளிய வேண்டுகோளைப் பாமாலையாகத் தொகுத்துள்ளார். அளப்பரிய பெருங் கருணைக் கடலாகிய இறைவனே! என்மீது கருணை-கொள். அறியாது செய்யும் பிழைகளைப் பொறுத்து அருள்செய்தல் வேண்டும். குற்றமே செயினும் குணமெனக் கருதும் கொள்கை கண்டு நின் குரைகழல் அடைந்தேன் என்று சொல்லும் சுந்தரர் தேவாரம் நம் சிந்தையில் தேனாய் இனிக்கிறது. இறைவா உந்தன் நினைவால் உயிர் வாழ்கிறேன். உந்தன் பிரிவால் யான் சிந்தும் கண்ணீர் என்னையே அமிழ்த்துகிறது. நீ அளிக்கும் ஆன்மபலத்துக்காக ஏங்கி நிற்கிறேன், என்னை ஆட்கொண்டு அருளவேண்டும்-என்கிறார். உனக்குப்பணி செய்ய உந்தனை எந்நாளுநினைக்க வரம் எனக்கு நீ தா என்று கூறும் சொக்கநாத வெண்பா, நம் எண்ணத்தில் எதிரொலிக்கிறது. இறைபணிக் கொள்கையில் மில்டனின் சிந்தனைகளோடு செந்தமிழ்த் தேவாரத்தின் பற்பல பகுதிகளை ஒப்பிடும்போது இறைவன் முன் அனைவரும் சமம் என்பதாக-வும் வேறுபட்ட மொழிகளுக்கும் மாறுபட்ட கலாச் சாரங்களுக்கும் அப்பாற்பட்டதே இறைமைப் பற்று என்பதும் தெளிவாகிறது.

அன்றாடம் காலையில் மலரும் ஆதவன் ஒரு ஒளிப்பிழம்பு. அந்த ஒளிப்பிழம்பின் பொன்னிறமான கதிர்கள் மேகமண்டலத்தைக் கிழித்துக் கொண்டு உலகை நோக்கி வரும்போது இந்த மண்ணுல-கில் என்னென்ன விந்தைகள் நடக்கின்றன! குளிர்ந்த நீரில் மண்டிக் கிடக்கின்ற கொட்டியும் ஆம்பலும் மூடிய இதழ்க் கண்களைத்திறந்து உலகத்தை எட்டிப் பார்க்கின்றன. அல்லியும் தாமரையும் இளஞ் சிவப்பு இதழ்களைத் திறந்து புன்னகை பூக்கின்றன. புல்லின் பசிய இதழினைப் போர்த்தியிருந்த வெள்ளிய பனித்துகள் வேகமாக மறைகின்றது. மரப் பொந்துகளில் அண்டிக் கொண்டிருந்த பறவைக் கூட்டம் படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு விண் வெளியில் உலா வருகின்றது. இப்படி மண்ணிலும் விண்ணிலும் மகத்தான மாறுதலைச் செய்யும் ஞாயிற்று ஒளிப்பிழம்மை ம கவிஞன் பாரதி 'விண்ணை வெளியாக்கி விந்தை செய்யும் ஜோதி' என்று குறிப்பிடுவான் இந்த ஒளியிருந்தால் தானே நமது ஊனக்கண்கள் செயல படும். ஞாயிற்றின் ஒளி இல்லையாயின் நமது கண்கள் வெறும் சதைத் துண்டுகள் தானே! இந்த உண்மையை நாம் உணர்வதைக் காட்டிலும் பார்வையிழந்தோர் உணரும்போதே அழுத்தமான உண்மை வெளிப் படுகிறது. ஐம்பது வயது ஆவதற்

குள்ளேயே அழகான இருகண்களின் புறப் பார்வை இழந்த மாகவிஞன் மில்ட்ன் இதனை ஒரு கணம் யோசித்துப் பார்க்கிறான். ஆனாலும் கண்ணொளியை இழந்த பின்னரே காவியம் படைத்தவன் அவன். டிலைலா எனும் பேரழகியின்பால் மையல் கொண்டு மடியில் வீழ்ந்து பகைவர் கைப்பட்டுக் கண்ணிழந்த சாம்சனின் காவியத்தையும் படைத்தான். பார்வையிழந்த சாம்சனின் உரையாடல்களாக மில்டன் கூறுவனவெல்லாம் அவனது உணர்வுகளே இந்தக் கால கட்டத்தில் வெளியான மில்டனின் சிந்தனைகள் அனைத்தும் காட்சியளவையான் வந்தவையல்ல கருதல் அளவையான் வந்தவையே.

விண்ணும் மண்ணும் நிறைந்த பிரபஞ்சத்தை வெட்ட வெளியிலிருந்து படைத்தவன் இறைவன். ஆக்கவும் அழிக்கவும் வல்ல அவனையே இதோ கேட்கிறேன். ஊனுடம்பாகி உருவமெடுத்து இந்த உலகத்தில் பிறந்தபோதே ஒளியினைக் கொடுத்தாய்! இப்போது ஞாயிற்றின் ஒளியைப் பிரதிபலிக்கும் இந்த ஊனக்கண்களின் ஒளியினைப் பறித்துக் கொண்டாய்! யான் செய்த பணிகளுக்கு இதுவோ பரிசு! ஊர்வனவும், பறப்பனவும் கண்ணொளியின் துணை கொண்டு நகரும்போது பகுத்தறியும் எனக்குப் பார்வையைத்தடுத்து விட்டாயே! இந்தக் கடுமையான கேள்விகளுக்குக் கடவுள் பதிலிறுக்க வில்லை. மில்டனின் உள்மனமே பதில் கொடுத்தது ''ஒருவன் தனது பணியினைச் செய்வதும் செயலற்றிருப்பதுவும் கடவுளின் கட்டளையல்ல இறைவன் அதனை எண்ணிப் பார்ப்பதுவும் இல்லை எந்தப் பிரதி பலனும் எதிர்பாராது பணி செய்: அந்தப் பணியினால் பலன் பெறுவோர் மகிழ்ச்சி அடைவர் அவரது மகிழ்ச்சியே உனது மகிழ்ச்சி உலக வாழ்க்கையில் ஏற்படும் லாப நஷ்டங்களுக்குக் கடவுளைப் பொறுப்பாக்காதே''. உள் மனத்தின் இந்தப் பதிலைக் கேட்டான் மில்டன். நற்றமிழ் வல்ல தாயுமானாரும் - அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே என்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது புறக் கண் பார்வையை இழந்தமையை மில்டன் எண்ணிப் பார்த்தானே யொழிய உளம் நொந்து போகவில்லை அகில உலகைப் படைத்த ஆண்டவன் அரிய எனது பார்வையைப் பறித்து விட்டானே என்று படைப்புக் கடவுளின் மீது பழி போட்டுக் குற்றம் சாட்டவில்லை. மாறாகத் தனது இலக்கியத் தொண்டினால் இறைபணி செய்தான். கடவுளின் செயற்பாடுகள் அனைத்தும் மானுடத்தின் நன்மைக்கே

என்ற தத்துவத்தை விளக்குவதான சுவர்க்க நீக்கம் என்ற பன்னிரண்டாயிரம் வரிகள் கொண்ட மாகாவியத்தைப் படைக்கிறான். சுவர்க்க மீட்சி எனும் சிறுகாவியத்தை நான்கு சிறுபகுதிகளாக எழுதுகிறான். படிக்கவோ எழுதவோ முடியாத நேரத்தில், பார்வையினை இழந்து நின்ற காலத்தில் இப்பாரகாவியங்களைப் படைத்த மில்டனின் மேதா விலாசம் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. முகத்திற்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்கள், அகத்திற்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம் எனும் திரு மூலர் வாக்கிற்கு ஆங்கிலத்தில் மில்டன் ஒரு இலக்கியமாகத் திகழ்கிறான். கண்ணிலே ஒளி இல்லை. ஆனால் கருத்திலே தெளிவு இருந்தது. அவனது சிந்தனையில் ஆழமிருந்தது. அகக்கண்ணால் பார்ப்பதே ஆனந்தம் என்று சொன்ன தமிழ் திருமூலருக்கு ஆங்கிலத்தின் மில்டன் ஒரு வாரிசு என்று கூடச் சொல்லலாம்.

மன்னராட்சிக்கு முடிவு கட்டி மக்களாட்சி மலர்ந்த காலத்தில் அந்தக் குடியரசினைக் கொள்கை நீதியாகப் புகழ்ந்தவன் மில்டன். மன்னனைச் சார்ந்து நின்றவர்களின் பேச்சுக்கும் ஏச்சுக்கும், இலத்தீன் மொழியிலும் ஆங்கிலத்திலும் ஆணித்தரமாகப் பதிலிறுத்தான். மீண்டும் முடியாட்சி வந்து இரண்டாம் சார்லசு அரியணை ஏறியபோது முடியாட்சியை எதிர்த்தோருக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது மில்டன சிறைவாசத்தோடு தப்பித்துக் கொண்டான் பார்வையிழந்த காலத்திலும் சிந்தனை ஓட்டம் குறையாத ஒரு மில்டனைக் கண்ட ஆங்கில நாடு அவனை மன்னித்து விட்டு அதற்குப் பின்னரே தான் சொல்லிப் பிறர் எழுத விவிலிய நூலைத் தழுவிய இரண்டு காவியங்களையும் படைத்தான் மில்டன்

ஒளிக்காட்சியில் இராமாயணம்

இந்திய மக்களின் பண்பாட்டிலும் கலாச்சாரத்திலும் ஊறிப் போயிருக்கிற இராமகாதை இந்த அறிவியல் யுகத்தில் ஒளிக்காட்சியிலும் வெளியிடப் படுகிறது குஜராத் மாநிலத்தில் எடுக்கப்படும் இப்படம் டில்லி நிலையத்திலிருந்து ஒளிபரப்பாகிறது. மொழிவேறுபாடின்றி இந்திய நாட்டு மக்கள் அனைவரும் இதனை மகிழ்வோடு கண்டு ரசிக்கின்றனர் இடையிடையே காட்டப்படும் விளம்பரங்களின் மூலம் இந்திய அரசுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் வருமானமும் கிடைக்கிறது இதனைத் தொடர்ந்து மகாபாரதக் கதையும் ஒளிக்காட்சியில் இடம்பெற உள்ளது.

பிறழ உணரப்பட்ட சங்கச்சொல்—'கல்லா'

எஸ். சௌந்தரபாண்டியன்
எம். ஏ (தமிழ்), எம் ஏ (ஆங்), பி.எட்., டிப், வமொ.
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை — 5.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் **'கல்லா'** என்ற சொல்லுக்கு, உ.வே.சா, நாட்டார், ஔவை துரை-சாமிப்பிள்ளை, பின்னத்தூரார், பொ. வே. சோமசுந்தரனார் முதலி-யோர், **படிக்காத அல்லது கற்காத** என்ற கருத்தில் பொருள் எழுதி-யுளர். அச்சொல் வரும் இடங்களை ஆய்ந்தால், இவர்கள் உரைத்தது திருத்தத்திற்கு உரியன என்பது தெளிவாகிறது.

மேற்கண்ட உரையாசிரியர்களின் அயர்ச்சிக்குக் காரணமான அச் சொல், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், பதிற்றுப்-பத்தின் பழைய உரைகாரர் ஆகியோரையும் தடுமாறிவிட்ட சொல்லாகும்

அடியார்க்கு நல்லார், 'கல்லாக்களிமகன் - அறிவின் மையாற் கொலை-யஞ்சான் ஒரு களிமகன்' (சிலப் கொலைக் 212) எனக் கூறுதலான், கல்லா என்பதற்குக் கற்றுக்கொள்ளாத என்றே பொருள் உணர்ந்-தமை தெளிவு

கல்லாமை - தனக்குரிய தொழிலைக் கல்லாமை (மலைபடு,312)

கல்லா மாந்தர் - காம நுகர்ச்சியினை யன்றி
வேறொன்மையுங் கல்லாத இளையோர் (மதுரைக் 420

கல்லா இளையர் தம் தொழிலை யொழிய
வேறு கல்லாத இளையர் (சிறுபா. 33)

கல்லா இளைஞர்—தம் சிறு தொழிலன்றி
வேறொன்றுங் கல்லாத இளைஞர் (பொருந. 100)

என்பன நச்சர் பிறழப் பொருள் உரைத்த இடங்களிற் சில. பிற இடங்களிலும் இவ்வாறே பொருள் உரைத்துளார்.

பதிற்றுப்பத்துப் பழைய உரைகாரர், 'கல்லா வாய்மை-கல்லாத தன்மையை உண்மையாகவுடைய' (பதிற். 5:7) எனலால், அவர் கல்லா என்பதற்குக் கற்காத என்ற பொதுப்பொருளையே கொண்டது வெளிப்படை.

கல்லா எனுஞ் சொல்லுக்கு மேற்குறித்த பொருள் எல்லாம் பிழை எனில், உண்மைப் பொருள்தான் யாது?

கல்லா என்ற சொல்லுக்கு **இளமை என்பதே சரியான பொருளாகும்**. மேற்குறித்த இடங்கள்எல்லாவற்றிலும் இப்பொருளைப் பெய்து உண்மை உணரலாம். மேலும் சில புதிய காட்டுக்களைக் காண்குவம்

> "கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
> கல்லா விளைஞர் கவளம் கைப்ப" (முல். 35-36)

என்பதில், 'கல்லா இளைஞர்' என்பதற்கு நச்சரின் வலிந்த உரை. 'வடமொழியை அடியிலே கல்லாத இளைஞர்' என்பதாம். யானைப் பாகர்கள் முறையாக வடமொழி கற்றதாகவோ கற்க வேண்டும் என்பதாகவோ யாண்டும் கூறப்படவே இல்லை யானைப் பாகர்களுக்கு வடமொழி அறிவு எதற்கு?

மேல் வரிகளில், 'கல்லா இளைஞர்' என்பதற்கு. 'இளமை ததும்பும் இளைஞர்கள்' என்பதே முல்லைப்பாட்டு ஆசிரியரின் கருத்து எனலாம். 'இளமை வலுவுடைய இளைஞர்கள் யானைக்கு கவை_ முட் கருவி கொண்டு, வடமொழிச் சொற்கள் சிலவற்றைக் (பாகர்கள் பயன்படுத்துவன) கூறி. கவளம் உண்ணும்படிக் குத்த' என்பதே அம் முல்லைப்பாட்டு அடிகளின் முறைப்பொருளாம்.

<u>உ. வே சா.</u>

"கல்லா மந்தி கடுவனோ டுகளுங்" (ஐங். 277 : 2)என்பதில், கல்லா மந்தி என்பதற்கு, "தம் தொழிலையன்றி மற்றொன்றையும் கல்லாத மந்தி" என்று பொருள் கூறினர்.

மந்தி (குரங்கு). அதன் தொழிலுடன் வேறு ஒன்றைக் கற்பது என்பது பொருளற்றது.

மேல் ஐங்குறு நூற்று வரியில், 'கல்லா மந்தி' என்பதற்கு, இளமை எனப் பொருள் கொண்டு, 'இளமையான குரங்கு, ஆண் குரங்கோடு தாவும்' என்ற நேர் பொருளைக் கொள்ளலாம்.

துரைசாமிப்பிள்ளை : "கல்லா விளையர் நீங்க" (புறநா. 262 : 6) என்பதற்கு, "போர்தொழிலை யன்றி வேறெத் தொழிலும் பயிலாதவரென்றதற்குக் கல்லா விளையர் என்றார்"என எழுது-வார்.

போர்வீரனைப் பேசும் புலவன், அவன் வேறு எதையும் கற்றானா இல்லையா என்றெல்லாம் குறிக்க வேண்டுவதே இல்லை. புறநானூற்றுப் புலவனின் மேலை அடிக்கு, "இளமை மிக்க குறை வயதுடைய வீரர் நீங்க' என்பதே உரிய பொருள்.

சோமசுந்தரனார், "கல்லா வன்பறழ்" (குறு. 69 : 3) என்பதற்கு, ' தன் தொழிலைக் கற்றிலாத தன் வலிய குட்டி" என்று பொருள் புகழ்வார்.

குரங்குக் குட்டி கற்க வேண்டிய தொழில் என ஒன்றுமில்லை. குறுந்தொகைப் புலவன் கூறியதற்கு, "வலிய இளங்குட்டி' என்பதே கருத்து.

இங்ஙனம் இன்னும் விரிக்கலாம் : விரிவஞ்சி விடப் படுகின்றன.

'கல்லாவின்' பொருள் இளமையே என்பதை வலுவடையச் செய்யும் இரு கூறுகள் : 1. எதிர்மறைச் சொல் 2. பழைய உரையில் ஓர் இடம்.

1. கல்லா என்பதன் எதிர்மறைச் சொல் 'கல்வி' என்பதாகும். மிக அரிய இச் சொல்.

"... ... ... இளமை யானை
கல்விப் பாகன் கையகப் பட்டாஅது '

(சிலப் கட் 37-38)

"**கல்விப்** பாகரிற் காப்புவலை யோட்டி" (மணி. 18 : 165 - 166) என வருகிறது.

மேற் சிலம்படிகளுக்கு, ''கல்வியாகிய பாகனுக்கு உட்படாது'' என்றே நாட்டார் உரை வகுத்தார். மேலை மேகலையடிக்கு, உ.வே. சா, ''கல்வியாகிய பாகர்களாற் காத்தலாகிய வலையைப் போக்கி'' என்று உரை வழங்கினார்.

முன் வந்த 'கல்விப் பாகன்' என்பதற்கு, 'இளம் பருவம் கடந்த பாகன்' என்பதே பொருள் ; அனுபவமுள்ள பாகன் என்றும் இடம் நோக்கிக் கோடலாம்.

கல்வியாகிய பாகன் என நாட்டாரும், ஐயரும் உரை கண்டது வலிந்த செய்கை. அவ்விடங்களில், கல்வியைப் பாகனாக உருவகம் செய்து இளங்கோவும், சாத்தனும் பாடவில்லை என்பது அறியத் தக்கது.

(2) ஐங்குறுநூற்றுப் பழைய உரையில்,

''கருவிரன் மந்திக் கல்லா வன்பார்ப்பு'' (ஐங். 280 : 11) என்பதற்குரிய உரையில், 'குரங்கின் இளம் பார்ப்பு' என்ற தொடர் பொறிக்கப்பட்டுள்ளது. ஈண்டு, கல்லா என்ற சொல்லுக்கு, 'இளம்' என அவ்வுரையாசிரியர் பொருள் பதித்துளது நோக்கலாம்.

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத்
தமிழ் தேர்வு பற்றிய செய்திகள்

மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :

1986 - 1987 ஆம் ஆண்டில் உயர் நிலை - மேல் நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில், மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூல்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச்சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர் நிலை, மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரம் :

10 - ஆம் வகுப்பு (எஸ். எஸ். எல். சி) தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் :

வ. எண்.	மாணவரின் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1.	மு. பாலசுப்பிரமணியன், அமெரிக்கன் கல்லூரி மேல் நிலைப்பள்ளி மதுரை-2	183	முதல்	100-00
2.	கே. ஆறுக்குட்டி, அரசினர் உயர்நிலைப்பள்ளி, வாகராயம்பாளையம்	182	இரண்டாம்	30-00
3.	சி. திருப்பதி அரசினர் உயர்நிலைப்பள்ளி, குறும்பேரி (இரண்டாம் பரிசுத்தொகை ரூ. 50 உடன் ரூ. 10 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இருவருக்கு சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது)	182	இரண்டாம்	30-00
4	ந. ஜோ தூயதெரசாள் மேல்நிலைப் பள்ளி, வடக்கன்குளம்	181	மூன்றாம்	25-00
5.	ஞா. சாக்கோ ஜெஸ்லின் சி. நா. ராமசாமி ராஜா மேல் நிலைப்பள்ளி, ஸ்ரீ கோமதிபுரம்	180	ஆறுதல்	10-00
6.	சு. சரஸ்வதி மங்கையர்க்கரசி மேல்நிலைப்பள்ளி, மதுரை - 10	180	,,	10-00
7.	மா. உஷா, தூயதெரசாள் மேல்நிலைப்பள்ளி, வடக்கன்குளம்	179	,,	10-00

8.	எஸ். கலைமணி, திரு. சாரதா வித்யாலய மகளிர் மேல்நிலைப்பள்ளி, அழகாபுரம், சேலம் - 16	178	,,	10-00
9.	தா. பாஸ்கர், தூயதெரசாள் மேல்நிலைப்பள்ளி, வடக்கன்குளம்.	177	,,	10-00
10.	என். இரமா பிரபா. திரு. சாரதா வித்யாலய மகளிர் மேல்நிலைப்பள்ளி, அழகாபுரம், சேலம் - 16	177	,,	10-00
11.	என். பார்த்திபன், அரசினர் உயர்நிலைப்பள்ளி, வாகராயம்பாளையம்	176	,,	10-00
12.	வி. ராஜ்குமார், அரசினர் உயர்நிலைப்பள்ளி, வாகராயம்பாளையம்	176	,,	10-00
13.	செ. க. மணிவண்ணன், தூயவளனார் மேல்நிலைப்பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர்	176	,,	10-00
14.	எஸ். பிரேமா, என். எல் சி. மகளிர் மேல் நிலைப்பள்ளி, நெய்வேலி	176	,,	10 00
15.	சு. சுவாமிநாதன், திலகர் வித்தியாலய மேல் நிலைப்பள்ளி, கல்லிடைக்குறிச்சி	175	,,	10.00
16.	எஸ். கண்ணன், எஸ். ஆர். என். வி. மேல்நிலைப் பள்ளி, இலக்குமி நாயக்கன் பாளையம்	175	,,	10-00
17.	என். ராதா, கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்	175	,,	10-00

18.	ஆர். ஸ்ரீகிருஷ்ணன் அரசினர் மேல்நிலைப்பள்ளி, இலால்குடி	175	,,	10-00
19.	எஸ். அருள்ஜோதிமேரி, என். எல். சி. மகளிர் மேல் நிலைப்பள்ளி, நெய்வேலி	175	,,	10-00
20.	க. வேதவல்லி, அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பெண்ணாடம்	175	,,	10-00
21.	வெ. தங்கப்பாண்டி, அரசினர் உயர்நிலைப்பள்ளி கொண்டையம்பட்டி	175	,,	10-00

12-ம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர் விவரம் :-

வ. எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத் தொகை ரூ.
1	வி. புவனா புனித மரியன்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி, செங்கள்பட்டு	178	முதல்	100-00
2.	ஜி. எஸ். சிவகுமார் சௌராட்டிரா மகளிர் மேல் நிலைப்பள்ளி. மதுரை - 9	177	இரண்டாம்	30-00
3.	ஆர். ஜி. ஹேமலதா, சௌராட்டிரா மகளிர் மேல் நிலைப்பள்ளி, மதுரை - 9	177	இரண்டாம்	30-00

(இரண்டாம் பரிசுத்தொகை ரூ 50 உடன் ரூ. 10 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இருமாணவருக்கு சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது)

4.	கே. பார்த்திபன், தூய மரியன்னை மேல் நிலைப் பள்ளி, மதுரை . 1	175	மூன்றாம்	25-00
5.	கி. முருகலட்சுமி, புனித வளனார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, மதுரை-9	174	ஆறுதல்	10-00
6.	சு. பாலசந்தர் பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி பாண்டிச்சேரி-1	173	,,	10-00
7.	டி. ஸ்ரீராம்குமார் தூய மரியன்னை மேல் நிலைப் பள்ளி, மதுரை-1	173	,,	10-00
8	என். தனலட்சுமி, புனித இக்னேசியஸ் கான்வென்ட் மேல் நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை	172	,,	10-00
9.	ஆ அபிடேகவல்லி, புனித பிலோமினாள் மகளிர் மேல் நிலைப்பள்ளி, திண்டிவனம்	172	,,	10-00
10	எ. அனிதா மகளிர் புனித மரியன்னை மேல் நிலைப் பள்ளி, செங்கற்பட்டு	172	,,	10-00
11	பெலிக்ஸ் ஜோசப் இந்து மேல்நிலைப்பள்ளி. மதுராந்தகம்	172	,,	10-00
12	எஸ். எம் ஜெய்னம்புல் ராசிதா பகுர்தீன் அரசு மேல்நிலைப்பள்ளி, பனைக்குளம்	172	,,	10-00
13.	நி. அம்மணி புனித இக்னேஷியஸ் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை	171	,,	10 00

14.	எம். சுஜாதா புனித இக்னேஷியஸ் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை	172	,,	10-00
15.	சா. பாபு தூயமைக்கேல் மேல்நிலைப்பள்ளி, கோயம் புத்தூர் - 1	171	,,	10-00
16.	ம. குளோத்தில்டா மேரி என்.எல்.சி. மகளிர் மேல் நிலைப்பள்ளி நெய்வேலி - 3	171	,,	10-00
17.	அ. ஸ்ரீராமன் பெத்திசெமினேர்மேல் நிலைப்பள்ளி பாண்டிச்சேரி - 1	171	ஆறுதல்	10.00
18.	ஆர். எம். கீதாநாத் சௌராட்டிரா மேல் நிலைப்பள்ளி மதுரை - 9	171	,,	10-00
19	ஐ. ஜேம்ஸ்ராஜேந்திரன் தூயமரியன்னை மேல் நிலைப்பள்ளி மதுரை - 1	171	,,	10-00
20.	சு. நாணம்மாள் என்ற ஜெயந்தி பி.கே.என். மகளிர் மேல் நிலைப்பள்ளி திருமங்கலம்	171	,,	10 00

1987 - 88 ஆம் ஆண்டு தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் குருநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள். புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல் மாநகரில் 1901 - ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்த தாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவகள். இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கல்லூரியில் தங்கி முறை யாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் புலவர் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு திருவுருவச்சிலை :

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

தேர்வின் அமைப்பும், பயனும் :

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு, கடந்த 86 ஆண்டுகளாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது. இத்தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்

பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள்நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு [PUBLIC EXAMINATION] முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு வாய்ப்பளிக்கிறது

சான்றிதழும் சிறப்புப்பரிசும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் **சான்றிதழ்** அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக **நூல்கள்** வழங்கப் படுகின்றன மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும், **ரொக்கப் பரிசுகள்** அளிக்கப்படுகின்றன அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் நாற்பது மாணவர்களுக்குமேல் ரொக்கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசுபெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் தமிழ்ச் சங்க வெளியீடாகிய "செந்தமிழ்" டிசம்பர் 1987 - ஆம் ஆண்டு இதழில் வெளியிடப் பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :

	தேர்வு நாள்	— தேர்வுக் கட்டணம்
பத்தாம் வகுப்பு (**S.S.L.C**)	13-2-1988	ரூ. 4. 25
,, (**Matriculation**)	13-2-1988	ரூ. 4 25

பன்னிரண்டாம் வகுப்பு (பொது)		6-2-1988	ரூ: 4. 25
,,	(சிறப்புத் தமிழ்)	8-2-1988	ரூ. 2. 25

பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேஷன்) தேர்வு :

பல மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர்களும் தமிழாசிரியர்களும் கேட்டுக் கொண்டதன்படி இவ்வாண்டு முதல் பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேஷன்) மாணவர்களுக்கு தனி வினாத்தாள் அமைக்கப்பட்டு தேர்வு நடத்த இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். முழுக்க முழுக்க மெட்ரிகுலேஷன் மாணவர்களுக்கான பாடத் திட்டப்படியே அவர்களுக்கு வினாத்தாள் அமைக்கப் படுகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அன்பு வேண்டுகோள் :

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டி அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இவ்வறிக்கை கிடைத்த உடனே இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள பாரத்தில் உங்கள் பள்ளியில் இருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் பாரம் கிடைத்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பெயர்ப் பதிவுப் பட்டியல் (2) வரவு செலவுப் பட்டியல் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியல் (4) கால அட்டவணை, தேர்வுக் கட்டண விபரம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விவரப்பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டுத் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லை யென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ச் சங்கத் தேர்வு நடத்திட அரசு அனுமதி :

அரசு ஆணை R. Dis 166528 / 65 Dated 22 - 12 - 65 என்ற ஆணையின் (G O) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை — 625001.

இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி
தலைவர்

தங்களன்புள்ள
என்.எஸ். முத்துமலைச்சாமி
செயலாளர்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4 மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 5-00
5. பெருந்தொகை (முதல்50பாடல்கள்மூலமும்உரையும்)2-00
6 குருகைமான்மியம் 10-00
7 டி சி. ஸ்ரீநிவாசயங்கார் நினைவு மலர் 1 00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு 5-00
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. **கோவை கலம்பக நூல்கள்** 12-00
   1 மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
   2. மதுரை மும்மணிக் கோவை
   3. சிராமலைக் கோவை
   4. கலசைக் கோவை
   5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
   6 திருவருணைக் கலம்பகம்
   7. குருமொழி வினா விடை
12. **உலா நூல்கள்** 10-00
   1 திருவாரூருலா
   2. திருச்சிறு புலியூர் உலா
   3. விக்கிரம சோழனுலா
   4 கடம்பர் கோவில் உலா
   5 தேவையுலா
   6. புலவராற்றுப்படை
13. **பாமாலை நூல்கள்** 12-00
   1. திருப்பணிமாலை
   2 சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
   3. திருக்குற்றாலமாலை
   4. திருப்புல்லாணிமாலை
   5 திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
   6 கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை
   7. கலைசைச் சிலேடை வெண்பா
   8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. ஸ்ரீ முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார்கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்** 6-50

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

★ ★ ★

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 8 00 செந்தமிழக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ ★ ★

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை 1

ஆலவாய் ○ சிம்மக்கல், மதுரை.